# HCCJMI/23

பதிவு எண் / Register No.

| |
|---|
| |

TNPSC - SPECIMEN

## மொழிப்பெயர்ப்பு தாள்

## TRANSLATION PAPER

(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

**(Tamil & English Versions)**

நேரம் : 3 மணி — மொத்த மதிப்பெண்கள் : 100

Duration : 3 Hours — Max. Marks : 100

*தேர்வர்களுக்கான பொதுவான குறிப்புகள் :*
*General Instructions to candidates :*

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண் மற்றும் தரப்பினர்களின் பெயர் ஆகியவை கற்பனையே. இருப்பினும், தேர்வர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
The facts and particulars provided in the Question paper i.e. the court's name, place, case numbers and names of parties are fictional. Yet candidates have to conclusively assume them to be true for the purpose of solving the questions.

ii) இந்த தாளில் மொத்தம் நான்கு பிரிவுகள் முறையே அ, ஆ, இ, ஈ உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் தலா இரண்டு வினாக்கள் என மொத்தம் எட்டு வினாக்கள் உள்ளன. அவை அனைத்திற்கும் விடை அளிக்க வேண்டும்.
The paper contains Four Sections A, B, C and D. Each section contains two questions in total 8 questions and all the questions should be answered.

iii) அ பிரிவில் உள்ள ஒவ்வொரு வினாவும் தலா 20 மதிப்பெண்கள் கொண்டுள்ளது. ஆ, இ மற்றும் ஈ பிரிவுகளில் உள்ள ஒவ்வொரு வினாவும் தலா 10 மதிப்பெண்கள் கொண்டுள்ளது.
Questions in Section A carry 20 marks each. Questions in Sections B, C and D carry 10 marks each.

TNPSC - SPECIMEN

## மொழிப்பெயர்ப்பு தாள்

## TRANSLATION PAPER

### பிரிவு அ — (2 × 20 = 40)

### SECTION A — (2 × 20 = 40)

TNPSC - SPECIMEN

1. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும்:

**Translate the following into Tamil :**

1. We have heard learned Counsel appearing on behalf of the respective parties at length.

2. At the outset, it is required to be noted that the learned Trial Court, on appreciation of evidence on record, specifically recorded findings on readiness and willingness on the part of the Plaintiff to perform his part of the agreement. The findings recorded on readiness and willingness on the part of the Plaintiff were on appreciation of the entire evidence on record. In the legal notice which was issued on 20.11.2007, the Plaintiff asked the Defendant to receive the balance amount and execute the sale deed. In reply to the legal notice, the Defendant denied the execution of agreement to sell itself. That thereafter, the Plaintiff filed the suit for specific performance in which it was specifically averred that he was ready and willing to perform the agreement dated 13.03.2007. In his deposition, the Plaintiff specifically stated that he was ready and willing to perform his obligations under the agreement. He further stated that he approached the Defendant in the month of June, 2007 and again in July, 2007 with the balance sale consideration. There is no cross-examination in this regard. The Plaintiff also examined two witnesses, PW-2 and PW-3, who were the attestors to the agreement to sell dated 13.03.2007, Specifically stated that in July, 2007, the Plaintiff approached the Defendants and asked them to accept the balance sale consideration in cash, to that also there is no cross-examination. The receipt of Rs.3 lakhs by way of earnest money, has been held to be proved by both the courts below. Within a period of one month from passing of the decree, the Plaintiff deposited the balance sale consideration i.e., Rs.9,74,000/- before the learned Trial Court.

3. From the impugned judgment and order passed by the High Court, it appears that the reasoning given by the High Court is that the Plaintiff has not proved that he had the cash and/or amount and/or sufficient funds/means to pay the balance sale consideration, as no passbook and/or bank accounts was produced.

**2. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :**

**Translate the following into English :**

நாங்கள் தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் மற்றும் கற்றறிந்த கூடுதல் அரசு வழக்குரைஞர் ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம்.

1973-ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் (சுருக்கமாக சட்டம்) இ பிரிவு 311 முக்கியமான சாட்சிக்கு அழைப்பாணை அனுப்ப அல்லது முன்னிலையாகியுள்ளவரை விசாரிப்பதற்கான அதிகாரம் குறித்து வகைசெய்கிறது.

ஒரு கட்டுப்பாடு விதிக்காத இப்பிரிவின் முதல் பகுதியானது குற்றவியல் நீதிமன்றத்திற்கு முழுமையான விருப்புரிமை அதிகாரத்தை வழங்கி இச்சட்டத்தின் படி செய்யப்படும் பரிசிலனை விசாரணை அல்லது வேறு நடவடிக்கைகளில் எந்தக் கட்டத்திலும் (1) சாட்சியான எவருக்கும் அழைப்பாணை அனுப்பவும் அல்லது (2) சாட்சியாக அழைப்பாணை அனுப்பப்படாவிட்டாலும் முன்னிலையாகியுள்ள எவரையும் விசாரிக்கவும் அல்லது (3) ஏற்கெனவே விசாரிக்கப்பட்ட எவரையும் மீண்டும் அழைத்து மறுவிசாரணை செய்யவும் என இந்த மூன்று வழிகளில் ஏதேனும் ஒரு வழியில் செயல்படுவதற்கு நீதிமன்றத்தை இயல்விக்கிறது. வழக்கை நியாயமாகத் தீர்மானிப்பதற்கு அவரது சாட்சியம் மிக்க அவசியமென தோன்றுமாயின் அந்த நபருக்கு (1) அழைப்பாணை அனுப்பி விசாரித்தோ அல்லது (2) அவரை மீண்டும் அழைத்து மறுவிசாரணை செய்யவோ நீதிமன்றத்தின் மீது ஒரு கடமையை வலியுறுத்துக் கட்டளையான இரண்டாவது பகுதி விதிக்கிறது.

நீதியின் குறிக்கோளை அடைவதற்காக மட்டுமே நீதிமன்றத்தால் பிரிவு 311-இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தை துணைகொள்ளமுடியும் என்பது நன்கு அறுதியிடப்பட்டுள்ளது. அதிகாரமானது உறுதியான மற்றும் செல்லத்தக்க காரணங்களுக்காக மட்டுமே செயலுறுத்திப்பட வேண்டும் மற்றும் அது மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயலுறுத்தப்படவேண்டும். நீதிமன்றம் இப்பிரிவின்கீழ் நீதியின் நலன்கருதி தேவையான மறுவிசாரணை செய்வதற்கோ அல்லது மேல்விசாரணை செய்வதற்கோ சாட்சிகளை மீண்டும் அழைப்பதற்கும் பரவலான அதிகாரத்தைப் பெற்றுள்ளது ஆனால் ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளையும் சூழ்நிலைகளையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபிறகே அதை செயலுறுத்த வேண்டும். நீதிமன்ற கட்டளையைத் தவறாகப் பயன்படுத்தும் விதமாக விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது நீதிமன்றம் கருதுமானால் இவ்வகையத்தின் கீழான அதிகாரத்தைச் செயலுறுத்தக்கூடாது.

TNPSC - SPECIMEN

## பிரிவு ஆ — (2 × 10 = 20)

## SECTION B — (2 × 10 = 20)

3. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

**Translate the following into Tamil :**

I worked as the Branch Manager of Vellore Branch while Mr. Kannan and Mr. Kasinathan worked at Tiruvannamalai Branch. The Vellore Branch and the Tiruvannamalai Branch both come under Salem Regional Office. During the relevant period, I am not the superior officer to Mr. Kannan and Mr. Kasinathan.

In our Bank, at least once in 3 months meeting used to be conducted by the Regional office to review about the performances of each Branch and its Managers. Tiruvannamalai Branch was opened in February 2008. Mr. Kannan was posted at Tiruvannamalai Branch as Branch Manager. Prior to that, he was working as an officer in Salem Regional Office.

I do not know whether he was the first Branch Manager of Tiruvannamalai Branch. I do not know whether any complaints against Mr. Kannan preferred by Union Bank of India while I was working as Branch Manager, Vellore. I am not aware whether any enquiry was commenced or conducted against Mr. Kannan and Mr. Kasinathan by the Bank.

I am not aware whether Tiruvannamalai Branch was in the first place in deposits and advancing loans. But we have heard from the Regional Office that it was in a better place in acquiring deposits and advancing loans. I am not aware whether Tiruvannamalai Branch was in a better position in acquiring deposits and advancing loans during the period of Mr. Kasinathan.

TNPSC - SPECIMEN

I am not aware while Tiruvannamalai Branch was performing well during the period of Mr. Kannan, he was suddenly transferred to Erode Branch without any specific reason. I am aware that Mr. Kannan was posted there as an accountant in Erode Branch. Before being posted as Manager, Tiruvannamalai Branch, Mr. Kasinathan worked as Accountant in Salem-Five Road Branch. I do not know whether Mr. Kasinathan, was posted at Tiruvannamalai Branch as Branch Manager for the first time.

TNPSC-SPECIMEN

**4.** **கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :**

**Translate the following into English :**

என்மூலம் தற்போது குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் மத்திய மோட்டார் வாகன விதிகள் 2005 என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் பவர் டில்லர் என்றால் என்ன என்பது பற்றி பக்கம் 2-ல் வரையறை செய்யப்பட்டுள்ளது. அந்த விதிகளில் பவர் டில்லர் சம்பந்தமாக நீள, அகலங்கள், டயர் பொருத்தப்பட வேண்டிய விவரங்கள், பிரேக் சம்பந்தப்பட்டவை, ஸ்டியரிங் கியர் ஆகியவை குறித்து சொல்லப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் பவர் டில்லர் வாகனம் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளதா? என்றால் இல்லை. ஆனால் பதிவு செய்யப்பட்ட பிறகு கடைபிடிக்கப்பட வேண்டிய விதிகள்தான் இந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக சிபிஐ போலீசார் என்னை 2011 ஆம் ஆண்டு விசாரித்தார். நான் சிபிஐ விசாரணையில் மத்திய மோட்டார் வாகன சட்டம் பிரிவு41(4) படி போக்குவரத்து வாகனம் மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனம் என்று வாகனங்களை வகைப்படுத்தி சொல்லியிருக்கிறேன். அதன்படி பவர் டில்லர் மற்றும் டிராக்டர் பொது சாலைகளில் பயன்படுத்தும்போது அவை போக்குவரத்து வாகனமாக கருதப்படும். விவசாய பயன்பாட்டிற்கான பவர் டில்லர் மற்றும் டிராக்டர்களில் டிரெய்லர் இணைக்கப்பட்டிருந்தால் அவை போக்குவரத்து வாகனமாகக் கருதப்பட்டு கண்டிப்பாக பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் சிபிஐ விசாரணையில் சொல்லியிருக்கிறேன். டிரெய்லர் இணைக்கப்படாத விவசாயப் பயன்பாட்டிற்கான பவர் டில்லர் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டுமென்று சிபிஐ விசாரணையில் நான் சொன்னேன். ஆனால் அவர்கள் எழுதவில்லை. சிபிஐ விசாரணையில் சொல்லாத ஒன்றை நீதிமன்றத்தில் முதல்முறையாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விவசாயப் பயன்பாட்டிற்கான டிரெய்லர் பொருத்தப்படாத பவர் டில்லர் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டுமென்று நான் சொல்வது தவறானது என்றால் சரியல்ல.

## பிரிவு இ — (2 × 10 = 20)

## SECTION C — (2 × 10 = 20)

5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

**Translate the following into Tamil :**

This Deed of Absolute Sale and Conveyance is made and executed on this 9th day of April, 2008, at Bangalore by Mr. Raj Kumar Menon, aged about 65 years, S/o. late Sri. KTB Menon, residing at Sun Plaza, 2nd Floor, No.19, G N Chetty Road, Chennai-600 006, represented by his Special Power Attorney Holder, Mr. R. VENKATESH, S/o. late M.V. Ramanna, residing at No. 21/1, 11th Cross, Kathriguppa Main Road, Bangalore-560 050, under Special Power of Attorney dated 15.04.1996, hereinafter referred to as the "VENDOR".

AND

Mrs. Pritig Shah, aged about 50 years W/o. Sri. G J Shah, residing at No.5/1, North Public Square Road, Basavanagudi, Bangalore-560 004, represented by Mr. Naresh J Shah, hereinafter referred to as the "CONFIRMING PARTY";

TO AND IN FAVOUR OF

Esha G Shah, aged about 19 years D/o Sri. Girish J Shah, residing at No.5/1, North Public Square Road, Basavanagudi, Bangalore-560 004, hereinafter referred to as the "PURCHASER.

TNPSC - SPECIMEN

(the terms Vendor, CONFIRMING PARTY and PURCHASER, shall wherever the context so requires, mean and include their respective heirs, executors, legal representatives, administrators, nominees and assigns).

WHEREAS all that immovable property being agricultural dry land bearing Survey No.105 measuring an extent of 5 Acres (including 3 guntas kharab) situated at Shetterahalli Village, Kasaba Hobli, Devanahalli, Taluk, morefully described in the Schedule below and hereinafter referred to as “SCHEDULE PROPERTY”, originally belonged to M/s. Standard Brick and Tile Company (Yelahanka) Private Limited;

WHEREAS M/s. Standard Brick and Tile company (Yelahanka) Private Limited sold the Schedule Property to the vendor herein under a Deed of Sale dated 08.10.1969. Since then the VENDOR herein become the sole and absolute owner of the Schedule Property and is in continuous peaceful possession of the same and thereafter having paid all the property tax and cess.

TNPSC - SPECIMEN

6. **கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :**

**Translate the following into English :**

தான பத்திரம்

இந்த தான பத்திரம் 2023 ஆண்டு, அக்டோபர் மாதம் 10 ஆம் நாள் ஸ்ரீராமன் தா/பெ தசரதன் சுமார் 50 வயது என்பவரால்

இனி இந்த ஆவணத்தில் ஸ்ரீராமன் “கொடுப்பவர்” என்று அழைக்கப்படுவார். இது அவரது வாரிசுகள், சட்டப் பிரதிநிதிகள். நிறைவேற்றுபவர்கள், நிர்வாகிகள் மற்றும் ஒரு பகுதியின் ஒதுக்கப்பட்டவர்கள் போன்றவற்றைக் குறிக்கும்.

ஆதரவாக

ராமராஜன் S/o. ஸ்ரீ ராமன் வயது சுமார் 25. இனிமேல் “பெறுபவர்” என்று அழைக்கப்படுவார். இது அவரது வாரிசுகள், சட்டப் பிரதிநிதிகள், நிறைவேற்றுபவர்கள், நிர்வாகிகள் மற்றும் பிற பகுதிக்கு ஒதுக்கப்பட்டவர்கள் போன்றவற்றைக் குறிக்கும்.

கொடுப்பவர் அட்டவணைச் சொத்தின் முழுமையான உரிமையாளர். அவர் இந்த சொத்தினை தானமாக பிறர்க்கு கொடுக்க தகுதியுடையவர்.

“பெறுபவர்” கொடுப்பவரின் ஒரே மகன். பெறுபவர் மீதான இயல்பான அன்பு மற்றும் பாசத்தின் காரணமாக அடியில் உள்ள அட்டவணையில் கண்ட சொத்தை தானமாக கொடுக்க விரும்பி அதனை பெறுபவர் ஏற்றுக்கொள்ள மனப்பூர்வமாக எழுதி கொடுக்கும் தான பத்திரம்.

இப்போது இந்தப் தானபத்திரம் பின்வருமாறு சாட்சியமளிக்கிறது:

கொடுப்பவர் இதன்மூலம் இதுவரை அனுபவித்து வந்த அனைத்து உரிமைகளையும், பெறுபவருக்கு ஆதரவாக மாற்றுகிறார். இனி பெறுபவர் அட்டவணைச் சொத்தை அனுபவிக்க, மாற்ற, விற்க முழுமையான உரிமை பெற்றவராவார்.

வேறு எவரிடமிருந்தும் இனி ஏதேனும் குறுக்கீடு அல்லது இடையூறு ஏற்பட்டால் கொடுப்பவர் அதனை முன்னின்று தீர்த்து வைக்க கடமை கொண்டவர்.

அட்டவணைச் சொத்தின் உரிமைப் பத்திரம் மற்றும் ஏனைய ஆவணங்களையும் சுவாதின உடைமையினையும் பெறுபவரிடம் வழங்கியுள்ளார்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சொத்து அனைத்து சுமைகள், கட்டணங்கள், முன் விற்பனை, அன்பளிப்பு, அடமானம், காப்புரிமை, வழக்குகள் மற்றும் நீதிமன்ற இணைப்பு போன்ற அரசு அல்லது தனியார் சுமைகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டதாக இதன் மூலம் கொடுப்பவர் தெரிவிக்கிறார்.

‘கொடுப்பவர்’ அட்டவணைச் சொத்தைப் பொறுத்த வரையில் அந்தந்தத் துறைகளுக்கு அனைத்து வரிகள் மற்றும் கட்டணங்களை இது நாள் வரை செலுத்தியுள்ளார்.

வருவாய் பதிவேடுகளில் அட்டவணை சொத்து, பெறுபவர் பெயரில் மாற்றுவதற்கு, கொடுப்பவர் ஒத்துழைக்க ஒப்புக்கொள்கிறார்.



TNPSC - SPECIMEN

## பிரிவு ஈ — (2 × 10 = 20)

## SECTION D — (2 × 10 = 20)

7. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :

**Translate the following into Tamil :**

1. I am the official Assignee of the High Court of Judicature at Madras. One Mr. Arjunlal Sunderdas R/o. No.23 Anderson Road, Nungambakkam, Chennai 600 006 was adjudicated as an insolvent on a Creditor's Petition by an order of the Hon'ble High Court of Madras on 21.04.2014 in IP No.25 of 2014.

2. It is further submitted that, the Plaintiff Rajkumar Menon entered into an Agreement of Sale dated 23.08.2007 in favour of the insolvent Arjunlal Sunderdas and had received the full consideration of 12 crores by means of 12 cheques, for land measuring about 105 acres located in Shetterahalli Village, Devanahalli Taluk. Incidentally, this land is the subject matter of the present litigation before this Hon'ble Court. As per the terms of the sale agreement dated 23.08.2007, the insolvent Arjunlal Sunderdas was put in possession of the entire property. The Plaintiff herein had also executed a general power of authority in favour of Arjunlal and his brother S.M Lal which was also registered as Document No.1766/2007 before the Sub Registrar's office, Mylapore. Since the power of authority dated 23.08.2007 was in pursuance of an agreement of sale, wherein, the Plaintiff had received the full consideration, by the operation of law, it is a Power of authority coupled with an interest. Hence it is incapable of unilateral termination by the Principal. Thus, even though the Sale agreement was not properly registered, the possession of the property was lawfully handed over to the insolvent and the Insolvent has acquired a legitimate claim over the title to the property. Currently, the property vests with the Official Assignee, High Court of Madras.

TNPSC - SPECIMEN

3. Plaintiff had totally concealed the fact that the suit schedule property have been already transferred to the Insolvent Mr. Arjunlal Sunderdas and consequently vest with the Official Assignee. It is to be noted that the Plaintiff herein had repeatedly talks about transfers by his power of authority which has allegedly taken place on or after 9th April 2008. Actually the title to the property had already passed onto the insolvent Arjunlal Sunderdas way back on 23rd August 2007. Even the claim of the Plaintiff that his cancellation of the Power of Authority dated 14th December 2009 to the insolvent cannot have any legal significance in view of the facts that the Power of authority is not just an agency but coupled within an equitable interest of purchasing the property for a legitimate consideration. However, the Plaintiff had been totally silent about the agreement of sale that he executed in favour of the insolvent Arjunlal Sunderdas.

TNPSC - SPECIMEN

**8.** **கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யவும் :**

**Translate the following into English :**

உரிமையியல் சட்டம், கட்டளை VII விதி (1)ன் கீழ் வழக்கு

1. வாதி பிரதிவாதியின் கீழ் குத்தகைதாரர். குத்தகைக்கான ஒப்பந்தம் 10/01/2010 அன்று போடப்பட்டது, அதன் பின்னர் வாதி தனது குடும்பத்துடன் கடந்த 10 ஆண்டுகளாக அந்தச் சொத்தில் வசிக்கிறார்.

2. தாவா சொத்து ஆதியில் இரண்டு அறைகள், கழிப்பறை மற்றும் சமையலறை கொண்டது. மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம் தவிர்த்து அந்த இடத்தின் வாடகை பிரதி மாதம் ரூ.150/- ஆகும். வாடகையை பிரதிவாதி நேரடியாக வாதியிடமிருந்து ரொக்கமாக வசூலித்து வந்தார். பிரதிவாதிக்கு வாடகை ரசீது வழங்கும் பழக்கம் இல்லை.

3. வழக்குச் சொத்தில், பிரதிவாதியின் வேண்டுகோளின் பேரில், வாதியின் மாத வாடகையில் இருந்து தொகை சரிசெய்யப்படும் என்ற குறிப்பிட்ட புரிதலின் அடிப்படையில் ரூ.1,00,000/- செலவழித்து முதல் மாடியில் கூடுதல் அறையை அமைத்தார். மேலே கூறப்பட்ட சொத்தில் அறைகள் கட்டியதற்கு தேவையான ஆவணங்கள்/சான்றுகள் வாதியிடம் உள்ளது.

4. வாதியின் அமைதியான அனுபவத்தில் தாவா சொத்து உள்ளது. ரேஷன் கார்டு, ஆதார் அட்டை மற்றும் தேர்தல் வாக்காளர் அடையாள அட்டை போன்ற தேவையான ஆவணங்கள்/பதிவுகள் வாதியின் சுவாதீனத்தினை உறுதிச்செய்யும். பிரதிவாதி, வாதியை வலுக்கட்டாயமாக காலி செய்ய உத்தேசித்து, தாவாவில் கூறப்பட்ட வளாகத்தின் வாதியின் அமைதியான உடைமைக்கு இடையூறு ஏற்படுத்த முயற்சிக்கிறார்.

5. 01/05/2020 அன்று மேலே கூறப்பட்ட பிரதிவாதியின் ஆட்கள் வாதியின் தாவா வளாகத்திற்கு வந்து வாதியை உடனடியாக குத்தகைக்கு விடப்பட்ட இடத்தை விட்டு காலி செய்யுமாறும், இல்லையெனில் வாதி கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் மிரட்டினார்கள். பின்னர் வாதி அவர்களின் அடையாளத்தை கேட்டபோது அவர்கள் அதை வெளிப்படுத்தவில்லை. மாறாக வீட்டுப் பொருட்களை வலுக்கட்டாயமாகவும் சட்டவிரோதமாகவும் வீசத் தொடங்கினர். வாதியும் மற்றும் உள்ளூர்வாசிகள் / அக்கம்பக்கத்தினர் இந்த விஷயத்தில் தலையிட்டபோது வாதியுடன் வந்தவர்கள் தகராறில் ஈடுபடத் தொடங்கினர், பின்னர் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என அச்சுறுத்தி, வாதியை வலுக்கட்டாயமாக வெளியேற்றிவிட்டு அங்கிருந்து வெளியேறினர்.

எந்த நேரமும் உள்ளூர் குண்டர்களின் உதவியுடன் எதிர்காலத்தில் பிரதிவாதி வாதியை சட்டவிரோதமாக சொத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்ற வாய்ப்புள்ளது.

6. வாதி வழக்கு சொத்தை அமைதியான உடைமைக்கு பங்கம் ஏற்படுவதை தடுக்க பிரதிவாதி, அவரது ஆட்கள் மற்றும் முகவர்கள் ஆகியோருக்கு எதிரான தடை உத்தரவு பெறுவதற்காக இந்த மாண்புமிகு நீதிமன்றத்தை அணுகுவதைத் தவிர வாதிக்கு வேறு வழி இல்லை.

7. தாவாக்கான மூலம் இந்த நீதிமன்றத்தின் பிராந்திய அதிகார வரம்பிற்குள் வெவ்வேறு தேதிகளில் பிரதிவாதிகள் வாதியை வளாகத்தை காலி செய்யும்படி அச்சுறுத்தியபோது எழுந்தது.



TNPSC - SPECIMEN

**HCCJMII/23**

பதிவு எண் / Register No.

சட்டத் தாள் I

**LAW PAPER I**

(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

**(Tamil & English Versions)**

TNPSC - SPECIMEN

நேரம் : 3 மணி
Duration : 3 Hours

மொத்த மதிப்பெண்கள் : 100
Max. Marks : 100

*தேர்வர்களுக்கான பொதுவான குறிப்புகள் :*

*General Instructions to candidates :*

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண், ஆவணங்களின் விபரங்கள், தரப்பினர்களின் பெயர் மற்றும் சாட்சிகள் ஆகியவை கற்பனையே. இருப்பினும், தேர்வர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

The facts and particulars provided in the Question Paper i.e. the court's name, place, case numbers, documents details, names of parties and witnesses are fictional. Yet candidates have to take them to be true for the purpose of answering the questions.

ii) தேர்வர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடை அளிக்க வேண்டும். ஆனால் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாறிமாறி விடையளிக்க கூடாது.

Candidates may write the answers either in English or in Tamil but not in both.

iii) வினாக்கள் தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் வழங்கப்பட்டு உள்ளன. ஏதேனும் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவே இறுதியானது.

The Questions are provided in Tamil and English versions. In all matters and in case of doubt, English version is final.

iv) வினாக்களுக்கு விடையளிக்கும் போது, முன் தீர் முடிவு வழக்கின் விவரப்பட்டியலை அளிக்க வேண்டியதில்லை. தவறான அல்லது முழுமை பெறாத விவரப்பட்டியலை வழங்குதல், தேர்வர்களுக்கு பாதகமாக அமையும்.

The candidates need not provide cause title with citation while answering the questions. Providing wrong or incomplete cause title or quoting a wrong citation will be detrimental to the candidates.

v) விடையளிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தில் சுருக்கமாக தேர்வர்கள் விடையளிக்க வேண்டும்.

The Candidates shall give answers briefly within the space provided for answering.

vi) அ, ஆ, இ, ஈ என்ற ஒவ்வொரு பிரிவிலும் தலா ஏழு 3 மதிப்பெண் வினாக்கள் மற்றும் நான்கு 5 மதிப்பெண் வினாக்கள் முறையே இடம்பெற்றிருக்கும். தேர்வர்கள் அவற்றில் முறையே ஐந்து 3 மதிப்பெண் வினாக்கள் மற்றும் இரண்டு 5 மதிப்பெண் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

Section A, B, C, D have seven 3 marks questions and four 5 marks questions respectively in each Part and candidate shall answer five 3 mark questions and two 5 mark questions respectively in each Part.

TNPSC - SPECIMEN

சட்டத் தாள் I

# LAW PAPER I

பிரிவு அ

## SECTION A

பகுதி அ — **(5 × 3 = 15)**

**PART A — (5 × 3 = 15)**

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**Answer any FIVE Questions.**

## உரிமையியல் வழக்கு விசாரணைமுறைச் சட்டம்

## CODE OF CIVIL PROCEDURE

TNPSC - SPECIMEN

1. உ.வி.மு.ச.ன் உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நட்ட ஈட்டு செலவுத்தொகைகள் குறித்து விளக்கவும்.

   Explain Compensatory costs with relevant provision under CPC.

2. வரையறு :

   (அ) இடைக்கால வருமானம்

   (ஆ) அரசின் கடன்

   (இ) கட்டளை

   Define :

   (a) Mesne profit

   (b) Crown debt and

   (c) Precept.

3. ஒரு தீர்ப்புக் கடனாளி சொத்து மற்றும் கடன் பொறுப்புகள் குறித்து வெளியிடாமைக்காக எப்போது கைது செய்யப்படலாம்?

When can a Judgment debtor be arrested for non disclosure of assets and liability?

4. பணத் தீர்ப்பாணை நிறைவேற்றுதலில் பற்றுகை செய்யப்படாத முடியாத எவையேனும் 6 வகையான சொத்துகள் குறித்து குறிப்பிடவும்.

Mention any 6 kind of properties which cannot be attached in the execution of money decree?

5. உ.வி.மு.ச.ல் எச்சூழ்நிலையில் ‘முக்கியமான சட்டப் பிரச்சினை’ என்ற சொல்லமைப்பு பயன்படுத்தப்படுகிறது? ஏன்?

Why and In what context in CPC the expression ‘substantial question of law’ is used?

6. இந்திய நீதிமன்றங்களுக்கு ‘மரேவா உறுத்துக்கட்டளை’ப் பிறப்பிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளனவா? விளக்கவும்.

Explain whether Indian Courts are empowered to issue ‘Mareva injunction’.

7. உ.வி.மு.ச.ன் உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் விடுவினாக்கள் மூலம் வெளிப்படுத்துதல் குறித்து விளக்கவும்.

Explain discovery by interrogatories with relevant provision under CPC.

TNPSC - SPECIMEN

## பகுதி ஆ — (2 × 5 = 10)

## PART B — (2 × 5 = 10)

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any TWO Questions.**

8. நீதியின் நோக்கங்கள் சிதைக்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, ஓர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன? விளக்கவும்.

   Explain what are the powers conferred to a Civil Court to prevent the ends of justice being defeated?

9. நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் வழக்குச் சொத்துப் பேணுநரின் பங்களிப்பு மற்றும் கடமைப் பொறுப்பு குறித்து விளக்கவும். வழக்குச் சொத்துப் பேணுநர், எவ்வாறு நீதிமன்றத்திற்குரிய கடமை மற்றும் பணிகளில் நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் ஆணையரிலிருந்து வேறுபடுகிறார்?

   Explain the role and responsibility of a Receiver appointed by the court. How a receiver differs from a commissioner appointed by the court in his functions and duty to the court?

10. அசையாச் சொத்து தொடர்பான தடையுறுத்துக் கட்டளைக்கான உரிமை வழக்கான அனந்துல சுதாகர் – எதிர் – புச்சி ரெட்டி வழக்கில் என்ன கோட்பாடு மாண்பமை உச்ச நீதிமன்றத்தால் வகுக்கப்பட்டுள்ளது?

    What was principle laid by the Hon'ble Supreme Court in Anathula Sudhakar – va – Buchi Reddy case with regard to suit for prohibitory injunction relating to immovable property?

11. வழக்கெழு வினாக்கள் வனைந்த பிறகு கட்டளை 5ன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஓர் உரிமை வழக்கைத் தீர்வு செய்ய முடியுமா?

    Can a suit be disposed in exercise of power under Order V after framing of issues?

TNPSC - SPECIMEN

## பிரிவு ஆ

## SECTION B

### பகுதி அ — (5 × 3 = 15)

### PART A — (5 × 3 = 15)

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any FIVE Questions.**

## குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம்

## CODE OF CRIMINAL PROCEDURE

TNPSC - SPECIMEN

12. 'காவல்துறை பாதுகாவல்' மற்றும் 'நீதித்துறை பாதுகாவல்' என்பதற்கு இடையேயான வேறுபாட்டை விளக்கவும்.

    Explain the difference between, 'a person in police custody' and 'a person in judicial custody'.

13. ஒரு நபரை கைது செய்யும் போது ஒரு அலுவலரால் பின்பற்றப்படும் நடைமுறை என்ன?

    What are the procedures to be followed by the officer while making arrest of a person?

14. ஒரு நீதிமன்றம், எந்தக் கட்டத்தில் மற்றும் எப்போது மேற்கட்ட புலனாய்வை ஆணையிடலாம்?

    At what stage and when a court can order further investigation?

15. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், ஒன்றுக்கும் மேற்பட்ட குற்றங்களுக்காக விசாரிக்கப்படுகிறபோது, நீதித்துறை நடுவர் ஒரு விசாரணையில் அதிகப்பட்சமாக எவ்வளவு காலம் தண்டனை விதிக்கலாம்?

What is the maximum period of imprisonment a Judicial Magistrate can impose in one trial when the accused is tried for more than one offences?

16. விடுவித்தல் மற்றும் விடுதலை செய்தல் என்பவற்றுக்கு இடையேயான வேறுபாடு என்ன?

What is the difference between discharge and acquittal?

17. புலனாய்வின்போது கைப்பற்றப்படும் பொருள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுகிறது. ஆனால் அது விசாரணையில் வழக்குப் பொருளாகக் குறியிடப்படவில்லை. அது விசாரணை முடிந்த பிறகு எவ்வாறு அகற்றப்படுகிறது?

How, property seized during investigation and produced before the court but not marked as case property in the trial, be disposed after completion of trial?

18. நீதித்துறை நடுவர் தல ஆய்வு மேற்கொள்ள விரும்புகிறபோது, ஆய்வு செய்வதற்கு முன்பாகவும் பின்பாகவும் பின்பற்றப்படும் நடைமுறைகளை விளக்கவும்.

Explain the pre and post inspection procedures to be followed, when the Judicial Magistrate decides to conduct Local Inspection.

TNPSC - SPECIMEN

## பகுதி ஆ — $(2 \times 5 = 10)$

## PART B — $(2 \times 5 = 10)$

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any TWO Questions.**

19. எழுத்துமூல புகார் பெற்றதும், நீதித்துறை நடுவர், கு.வி.மு.ச., பிரிவு 156(3)ன் கீழான அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆள்வரையுடைய காவல்துறையினரைப் புலனாய்வு செய்து, அறிக்கையளிக்க ஆணையிடுகிறார். காவல்துறையினர் புலனாய்வுக்குப்பின், முடிவு அறிக்கை தாக்கல் செய்கிறார். நீதித்துறை நடுவர் முடிவு அறிக்கையைப் பெற்றுக் கொண்டதும் அவர் என்ன செய்யவேண்டும் என்பதற்கு வழிகாட்டுக.

    On receipt of a written complaint, the judicial magistrate exercising power under Section 156(3) of Cr.P.C order the jurisdiction police to investigate and report. The police after investigation, files closure report. Guide the Judicial Magistrate what he should do on receipt of the closure report.

20. ஏதேனும் நபரின் வழக்கு, அரசு வழக்குரைஞரால் திரும்பப் பெறப்படுவதற்கான சூழ்நிலை மற்றும் நடைமுறையை உரிய சட்டப்பிரிவுடன் விளக்கவும்.

    Explain with relevant provision of the Code, the circumstances and the procedure for withdrawal from prosecution of any person, by the public prosecutor.

21. விசாரணையின்போது தப்பியோடும் குற்றஞ்சாட்டப்பட்டவர் (அ) ஒரே குற்றம் சாட்டப்பட்டவராக இருந்தால் (ஆ) மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விசாரணை நாட்களில் முறையாக விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலையானால், அவரை தேடிப்பிடிக்க, நீதித்துறை நடுவர் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்?

    What are the steps a Judicial Magistrate should take to secure the accused absconding during the trial? (a) If he is the sole accused. (b) If there are other accused appearing before the trial court regularly on the hearing dates.

22. விசாரணை முடிந்ததும், ஆனால் தீர்ப்பில் கையெழுத்திடும் முன் நீதித்துறை நடுவர் அந்த வழக்கு அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என உணர்கிறார். அதற்குப்பின் நீதித்துறை நடுவர் என்ன செய்ய வேண்டும்?

    After completion of trial but before signing the judgment, the Judicial Magistrate realises it is a case which ought to have been tried by a court of sessions. What then the Judicial Magistrate do?

TNPSC - SPECIMEN

பிரிவு இ

## SECTION C

பகுதி அ — (5 × 3 = 15)

## PART A — (5 × 3 = 15)

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any FIVE Questions.**

**இந்திய சாட்சியச் சட்டம்**

## INDIAN EVIDENCE ACT

23. நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாத ஆவணத்தின் உள்ளடக்கம் குறித்த வாய்மொழி ஒப்புதல் ஏற்கத்தகுந்ததா? ஏன்?

    Whether an oral admission as to the content of document which is not produced before the court is relevant? Why?

24. நல்ல பண்போ, தீய பண்போ, இது எவ்வாறு குற்றவியல் வழக்குகளுடன் தொடர்புபடுத்தப்படுகிறது?

    Character Good and Bad, how it is relevant in criminal cases?

25. சதித்திட்டத்தைத் தொடர்ந்து செய்யப்படும் செயல்கள் குறித்து சதிகாரர் ஒருவர், மற்றொரு சதிகாரர் இல்லாதபோது கொடுக்கும் வாக்குமூலம் ஏற்கத்தக்கதா? ஏன்?

    Whether statement of one conspirator in the absence of other conspirator with regard to the acts done pursuant to conspiracy is admissible. Why?

26. ஒரு காரணத்தையும் அதன் விளைவினையும் குறித்து கூறுகிற ஒரு சங்கதியின் தொடர்புடைமை குறித்து எடுத்துக்காட்டுடன் விளக்கவும்.

    Explain with illustration the relevancy of a fact which speaks about cause and effect.

27. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 6, கேள்விநிலைச் சான்றின் பொது விதிக்கான விலக்குக்கூறுகளுள் ஒன்று என்பது ஏற்கத்தக்கதன்று என்பதை விளக்கவும்.

    Section 6 of the evidence Act is one of the exception to the general rule hearsay evidence is inadmissible. Explain.

28. இலக்கமுறை கையொப்பம் வரையறுக்கவும் மற்றும் இலக்கமுறை கையொப்பத்தை எவ்வாறு நிரூபிக்க வேண்டும்?

    Define Digital signature and how to prove a digital signature.

TNPSC - SPECIMEN

29. இந்திய சாட்சியச் சட்டப்படி பின்வருவனவற்றை உரிய சட்டப்பிரிவுடன் விளக்கவும்.

(அ) பிறழ் சாட்சி

(ஆ) விடைபொதி வினாக்கள்

(இ) சாட்சியின் நினைவைப் புதுப்பித்தல்.

Explain with relevant provision under Indian Evidence Act:

(a) Hostile witness

(b) Leading questions

(c) Refreshing the memory of the witness.

## பகுதி ஆ — (2 × 5 = 10)

## PART B — (2 × 5 = 10)

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any TWO Questions.**

30. (அ) கூட்டுக்குற்றவாளி நம்பத் தகுதியற்றவர்.

(ஆ) கூட்டுக்குற்றவாளி, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான ஒரு தகுதியான சாட்சி.

(அ) மற்றும் (ஆ) என்ற மேற்படி கூற்றுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடானவையா? அல்லது ஒன்றுக்கொன்று தொடர்புடையவையா? இதனை சாட்சியச் சட்டப்படி உரிய சட்டப்பிரிவுகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(a) An accomplice is unworthy of credit

(b) An accomplice shall be a competent witness against an accused.

Whether the above statements (a) and (b) are contradictory to each other or complimentary to each other. Explain referring the relevant provisions under the Evidence Act.

31. 'அ', 7 ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போய்விடுகிறார். அவரது மனைவி தனது கணவர் இறந்துவிட்டதாக அறிவிக்கக் கோருகிறார். 'அ'வின் தாயார், தனது மகன் உயிருடன் இருப்பதாகவும், தானும், தனது உறவினர்களும் கடந்த 30 ஆண்டுகளுக்குள் அவரைப் பார்த்துள்ளோம் என உறுதிபட கூறுகிறார். இதனை மெய்ப்பிக்கும் பொறுப்பு எவர் மீது அமைகிறது?

'A' gone missing 7 years ago. His wife wants a declaration that her husband is dead. The mother of 'A' asserts that her son is alive and seen by her and her relatives within 30 years. On whose shoulder the burden to prove lies?

32. செய்சட்டங்களைக் குறிப்பிட்டு எதிர்நிலையாக மெய்ப்பிக்கும் பொறுப்பை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

Explain reverse burden of proof referring the statutes and with illustration.

TNPSC - SPECIMEN

33. சாட்சி ஒருவரின் முந்தைய வாக்குமூலத்தின் தொடர்புடைமை : உறுதிப்படுத்துவதற்காக எப்போது இதைப் பயன்படுத்தலாம் மற்றும் எவர் இதை முரண்படுத்துவதற்காக பயன்படுத்தலாம்? முந்தைய வாக்குமூலம் அளித்த சாட்சி உயிருடன் இல்லை அல்லது கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அதற்கு ஏதேனும் விதிவிலக்கு உள்ளதா?

Relevancy of former statement of a witness: When it can be used for corroboration and who can use it for contradiction. Is there any exception, if the witness who made the former statement is not alive or not traceable.

பிரிவு ஈ

**SECTION D**

**பகுதி அ — (5 × 3 = 15)**

**PART A — (5 × 3 = 15)**

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any FIVE Questions.**

## இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்

## CONSTITUTION OF INDIA

34. நெருக்கடிநிலையின்போது அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைக்கலாம் – கருத்துரைக்கவும்.

During emergency, the fundamental rights can be put under suspension - Comment.

35. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பகுதி IV, அரசமைப்புச் சட்டத்தின் பகுதி IIIஐ விட மேலோங்கி நிற்கும் – கருத்துரைக்கவும்.

Part IV of the Indian Constitution will prevail upon Part III of the constitution - Comment.

36. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை, அவசரச் சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்படலாமா?

Can the preamble to the Indian Constitution be amended through Ordinance.

37. அடிப்படை கட்டமைப்புக் கொள்கை என்பது நீதிமன்றத்தின் கண்டுபிடிப்பு ஆகும். அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்ய நாடாளுமன்றமே உச்சநிலையான அதிகாரமுடையது, அதுவே இறுதியானது – இக்கருத்து குறித்து விளக்குக.

Critical note on the comment: Basic structure theory is an invention of Court. Parliament power to amend the constitution is supreme and absolute.

TNPSC - SPECIMEN

38. உயர் நீதிமன்றத்தின் கீழமைந்த நீதிமன்றங்கள்/தீர்ப்பாயங்கள் அதன் கண்காணிப்பு அதிகாரத்தின் கீழ் உள்ளன என்பது குறித்து சுருக்கக் குறிப்பு வரைக.

Write a short note on the Superintendent power of the High Court over the courts/tribunals subordinate to it.

39. அயல்நாட்டிற்குப் பயணிக்க ஒரு நபருக்குள்ள உரிமைக்கு தடையில்லையா? தீர்ப்புவழிச் சட்டங்களுடன் விளக்குக.

Whether right of a person to travel abroad is unfettered. Explain with case laws.

40. முரண்பாட்டு கொள்கை குறித்து விளக்கவும்.

Explain the Doctrine of repugnancy.

**பகுதி ஆ — (2 × 5 = 10)**

**PART B — (2 × 5 = 10)**

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any TWO questions.**

41. சுருக்கக் குறிப்பு வரைக : சிறப்புநிலை அதிகாரவரம்பு மற்றும் சொத்து வைத்திருப்பதற்கான அரசமைப்பு உரிமை.

Short note on : Doctrine of eminent domain and the constitutional right to hold property.

42. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9வது இணைப்புப் பட்டியலின் சிறப்பம்சம் யாது?

What is the special feature of IX Schedule of the Indian Constitution?

43. இந்திய நீதித்துறைக்கு அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 141 மற்றும் உறுப்பு 142 அளிக்கும் முக்கியத்துவத்தை விளக்குக.

Explain the significance of Article 141 and Article 142 of the Constitution to the Indian Judiciary.

44. இந்திய அரசமைப்பு ஏன் கூட்டாட்சி போன்ற அரசமைப்பு என அறியப்பெறுகிறது?

Why Indian Constitution is known as a quasi federal constitution?

TNPSC - SPECIMEN

**HCCJMIII/23**

பதிவு எண் / Register No.

| |
|---|
| |

TNPSC - SPECIMEN

# சட்டத் தாள் II

# LAW PAPER II

(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

**(Tamil & English Versions)**

நேரம் : 3 மணி — மொத்த மதிப்பெண்கள் : 100

Duration : 3 Hours — Max. Marks : 100

*தேர்வர்களுக்கான பொதுவான குறிப்புகள் :*

*General Instructions to Candidates :*

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண்கள், ஆவணங்களின் விபரங்கள், தரப்பினர்களின் பெயர் மற்றும் சாட்சிகள் ஆகியவை கற்பனையே. இருப்பினும், தேர்வர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

The facts and particulars provided in the Question Paper i.e. the court's name, place, case numbers, documents details, names of parties and witnesses are fictional. Yet candidates have to conclusively assume them to be true for the purpose of answering the questions.

ii) தேர்வர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடை அளிக்க வேண்டும். ஆனால் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாறிமாறி விடையளிக்க கூடாது.

Candidates may write the answers either in English or in Tamil but not in both.

iii) வினாத்தாளானது தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. ஏதேனும் சந்தேகம் இருப்பின், ஆங்கில வடிவே முடிவானது.

The Question Paper is provided in Tamil and English versions. In all matters and in cases of doubt, English version is final.

iv) தேர்வர்கள் தங்களை நீதிபதியாக பாவித்து கேள்வியில் கொடுக்கப்பட்ட விபரங்களை கவனத்திற்க் கொண்டு தேவையான எழு வினாக்களை வனைந்து கொடுக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் தீர்ப்பு எழுதவும்.

The candidates have to assume themselves as Presiding Officers and to consider the particulars furnished in questions and frame necessary issues and write judgements on given facts.

v) தேர்வர்கள் வழக்கின் தலைப்பு, வழக்கு எண், நீதிபதியின் பெயர், வழக்கு எண், ஆவணங்களின் பட்டியல், தரப்பினர்களுக்காக ஆஜராகும் வழக்கறிஞர்களின் பெயர்கள், ஆவணங்களின் பட்டியல் மற்றும் சான்று போன்றவற்றை எழுதத் தேவையில்லை. அவ்வாறு எழுதினாலும் வழக்கின் தலைப்புக்கு மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது. வழக்கின் சங்கதிகள் மற்றும் சாட்சியங்களை பரிசீலிக்கும் விதம், சங்கதிகளுக்கு பொருந்தும் சட்டத்தை பரிசீலிக்கும் விதம் வினாக்களுக்கு தேர்வர்கள் எழுதும் முடிவுக்கான காரணங்களின், அடிப்படையிலேயே மதிப்பெண்கள் வழங்கப்படும்.

Candidates need not write the cause title of case, case number, name of the judge, case number, names of the counsel appearing for the parties, list of documents, evidence etc, which would be indicative in nature. No marks will be awarded for writing the cause title etc. Marks will be awarded based on the appreciation of facts and evidence, application of law on the facts, reasoning given by the candidates for arriving at whatever conclusion they have reached.

vi) இந்தப் பிரிவில் நான்கு கேள்விகள் உள்ளன. ஒவ்வொரு கேள்வியும் 25 மதிப்பெண்களை கொண்டது.

There are 4 questions in this section and each question carries 25 marks.

vii) வினாக்களுக்கு விடையளிக்கும்போது முன் தீர் முடிவு வழக்கின் விவரப்பட்டியலை அளிக்க வேண்டியதில்லை. தவறான அல்லது முழுமை பெறாத விபரப்பட்டியலை வழங்குதல் தேர்வர்களுக்கு பாதகமாக அமையும்.

The candidates need not provide cause title with citation while answering questions. Providing wrong or incomplete cause title or quoting a wrong citation will be detrimental to the candidates.

TNPSC - SPECIMEN

**வினா எண் 1:**

மாற்று முறையாவணங்கள் சட்டப்பிரிவு 138 உடன் கு.வி.மு.ச., பிரிவு 200ன் கீழான தனியார் முறையீடு.

குற்றஞ்சாட்டப்பட்டவர் 03/12/2006 அன்று புகார்தாரரிடமிருந்து ரூ. 7 இலட்சத்தை இரண்டு மாதங்களுக்குள் திருப்பித் தருவதாக வாக்குறுதி அளித்து கடன் வாங்கினார். கடன் திருப்பிக் கொடுப்பதை உறுதி செய்யும் பொருட்டு, கடன் வாங்கிய நாளன்று, ரூ. 7 இலட்சத்துக்கான 03/02/2007 என்ற பின் தேதியிடப்பட்ட காசோலை வழங்கப்பட்டது. காசோலை களியக்காவிளை மத்திய கூட்டுறவு வங்கியில் பண வசூலுக்காக சமர்ப்பிக்கப்பட்டபோது, காசோலை 'பணக்கொடுப்பு நிறுத்திவைக்கப்பட்டது' எனத் திருப்பப்பட்டது. புகார்தாரர், 12/02/2007 அன்று குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சட்டப்படியாக அறிவிப்பு அனுப்பினார். குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிவிப்பைப் பெற்றுக்கொண்டு, பதிலளிக்கவில்லை.

புகார் உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது குழித்துறை நீதித்துறை நடுவரின் கோப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டது. புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். திருப்பப்பட்ட காசோலை, தகவல் குறிப்பாணை, அறிவிப்பின் நகல் மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை ஆகிய 4 ஆவணங்களும் முறையே அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையில் குறியீடு செய்யப்பட்டன.

குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சிக் கூண்டில் நின்று, காசோலை புகார்தாரருக்கு வழங்கப்படவில்லை எனவும், புகார்தாரர் ஒரு வெளியாள் என்றும், அவருடன் எந்த ஒப்பந்தம் சார்ந்த உறவும் இல்லை எனவும் சாட்சியமளித்துள்ளார். காசோலை, சட்டப்படி செலுத்தத்தக்க கடன் எதனையும் தீர்ப்பதற்காக வழங்கப்படவில்லை. வழக்குப் பொருளான காசோலை தொலைந்துவிட்டது, காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டது. ரூ. 7 இலட்சம் கடன் கொடுக்கும் அளவுக்கு புகார்தாரருக்கு நிதி வசதியில்லை. ரூ. 7 இலட்சம் கடன் கொடுப்பதற்கான நிதி ஆதாரத்தைக் காண்பிக்க குற்றஞ்சாட்டப்பட்டவரால் வருமானச் சான்று ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

காவல்துறையில் அளிக்கப்பட்ட புகாரின் நகல் மற்றும் பணக்கொடுப்பை நிறுத்திவைக்க அவரது வங்கிக்கு அனுப்பப்பட்ட கடிதம் எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டன.

குற்றச்சாட்டுகளை வனைந்து, தீர்ப்பு எழுதுக.

Private complaint under section 138 NI Act read with Section 200 CrPC:

The accused borrowed Rs. 7 lakhs from the complainant on 03/12/2006 with promise to repay it within two months. To ensure repayment, a post dated cheque for Rs. 7 lakhs dated 03/02/2007 was given on the date of borrowing. When the cheque was presented for collection before the Central Co-op Bank Kaliakkavallai Branch, the cheque returned as 'payment stopped'. On 12/02/2007 the complainant issued notice to the accused as required under the statute. The accused received the notice but did not reply.

TNPSC - SPECIMEN

The complaint filed in time. It was taken on file by the judicial Magistrate, Kuzhithurai. The complainant examined as PW-1. 4 documents, the returned cheque, intimation memo, copy of the notice and the postal acknowledgment card marked as Ex P-1 to Ex P-4 respectively. The accused mounted the witness box and deposed that the cheque was not issued to the complainant. The complainant is a stranger and he have no privity of contract with him.

The cheque was not issued for discharge of any legally enforceable debt. The subject cheque was lost and police complaint lodged. Thereafter the bank was instructed to stop payment if the cheque is presented for collection. The complainant have no financial source to lend Rs. 7 lakhs. No income proof filed by the complainant to show the source to lend Rs. 7 lakhs.

The copy of the police complaint and the letter addressed to his bank to stop payment were marked as Ex D-1 and Ex D-2.

Frame charges and write judgment.

TNPSC - SPECIMEN

**வினா எண் 2:**

24.02.2014 அன்று காலை சுமார் 9.30 மணிக்கு ஒன்பதாம் வகுப்பு படிக்கும் 14 வயது சிறுமியான பாதிக்கப்பட்டவர் பள்ளிக்குச் செல்லும் வழியில், வழிமறிக்கப்பட்டு, அவளது முகத்தில் ஆசிட் வீசப்பட்டது. அவள் தாக்கியவரை திருமணம் செய்துகொள்ள சம்மதிக்காததால் அவள் இந்த உலகத்தில் இருக்கக்கூடாது என்று தாக்கியவர் கூறியுள்ளார். குமார் (அ.சா.2) என்பவரும், வீராசாமி (அ.சா.3) என்பவரும் தலையிட முயன்றபோது தாக்கியவர் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார். தாக்கியவர், பாதிக்கப்பட்டவரின் மாமா மகன் தமிழரசன் என அடையாளம் காணப்பட்டார். பாதிக்கப்பட்டவர், அவரை திருமணம் செய்துகொள்ள மறுத்ததால், பழிவாங்கும் எண்ணம் கொண்டிருந்தார். தாக்கியவரின் தாயார், பாதிக்கப்பட்டவரை தாக்குவதற்கு தாக்கியவரை தூண்டிய உடன் குற்றவாளியாகக் காட்டப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர் உடனடியாக 108 ஆம்புலன்ஸ் வண்டியில் ஜெயம்கொண்டம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார், அங்கிருந்து அவள் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரிக்கு அனுப்பப்பட்டாள். மீன்சுருட்டி காவல் நிலைய உதவி காவல் ஆய்வாளர், ஜெயம்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைக்கப் பெற்றவுடன், மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்ட சிறுமியின் வாக்குமூலத்தை எழுத்துமூலமாக அ.சா.ஆ. 1 ஆக எடுத்து, இ.த.ச., பிரிவுகள் 341, 294(ஆ), 506(i) மற்றும் 307ன் கீழான குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவரின் மீது குற்ற எண் 60/2014ல் மு.த.அ. (அ.சா.ஆ.9) பதிவு செய்து, அதனை ஜெயம்கொண்டம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

மீன்சுருட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அதே நாளன்று புலனாய்வை மேற்கொண்டு எ.1ஐ கைது செய்தார். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காலி ஆசிட் புட்டி மகசரின் கீழ் கைப்பற்றப்பட்டது. புலனாய்வு முடிந்ததன்பேரில், இ.த.ச., பிரிவுகள் 341, 294(ஆ), 506(i)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக 26.07.2014 அன்று ஓர் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டவர் கொடுங்காயங்கள் அடைந்தார் என்பதை மருத்துவரால் வழங்கப்பட்ட காயச் சான்றிதழ் தெரிவிக்கிறது.

பாதிக்கப்பட்ட சிறுமி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவரான தாக்கியவரை அடையாளம் காட்டினாள். ஆசிட்டினால் முகத்தில் ஏற்பட்ட தீப்புண்களை நீதிபதியிடம் அவள் காட்டினாள் மற்றும் நீதிபதி அவர்களால் அது சாட்சியமாகக் குறித்துக் கொள்ளப்பட்டது. அ.சா.2 மற்றும் அ.சா.3 இருவரும் நிகழ்வின் சாட்சிகள். அவர்கள் அ.சா.1 சாட்சியை ஒத்து சாட்சியமளித்துள்ளனர். அரசுத்தரப்பு காயச் சான்றிதழை முன்னிலைப்படுத்தவும், அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரிக்கவும் தவறிவிட்டது.

குற்றச்சாட்டுகளை வனைந்து, தீர்ப்பு எழுதுக.

On 24.02.2014 at about 9.30 am., a 14 year old girl studying in IX standard was waylaid and threw acid on the face of the victim on her way to school. The assailant has exclaimed that she should not be in this World when she has not assented for marrying him. The assailant then fled from the scene when one Kumar (P.W.2) and one Veerasami (P.W.3) tried to intervene. The assailant was identified as the cousin Tamilarasan of the victim. The motive was to take revenge since the victim refused to marry him. The mother of the assailant shown as co-accused for inducing the assailant to attack the victim. The victim was rushed to the Jayamkondam Government Hospital in an 108 Ambulance from where she was referred to Thanjavur Medical College Hospital. The Sub Inspector of Police, Meensurutti Police Station, on receipt of information from Jayamkondam Government Hospital, visited the hospital and took the statement of the victim girl reduced it into writing as Ex.P.1, registered an FIR (Ex.P9) in Crime No.60/2014 against the accused for the offences under Sections 341, 294(b), 506(i) and 307 IPC and sent the same to Judicial Magistrate Court, Jayamkondam.

The Inspector of Police, Meensurutti police station, took up the investigation on the same day. A-1 was arrested. Based on his confession, the empty acid bottle was recovered under mahazar. On completion of the investigation filed a final report on 26.07.2014 against the accused for the offences punishable under Sections 341, 294(b), 506(i) IPC. The wound certificate given by the doctor reveal that the victim had sustained grievous injuries.

The victim girl examined as PW-1 identified the assailant the accused the acid burn marks on the face of PW-1 shown to the judge and taken note by the judge in the deposition. PW-2 and PW-3 both witnesses to the occurrence had supported the case of the PW-1. The prosecution fail to produce the wound certificate and examine the doctor who treated PW-1.

Frame charges and write judgment.

TNPSC - SPECIMEN

**வினா எண் 3:**

எ.1 முதல் எ.3 வரையிலானவர்கள் சகோதரர்கள். அவர்கள் அனைவரும் சட்டவிரோதமாக மணல் அள்ளுதலில் ஈடுபட்டனர். அவர்கள் இறந்துபோனவரான முத்துராமலிங்கம் என்பவருடன் சட்டவிரோதமாக மணல் அள்ளுதல் தொடர்பாக பிரச்சினை செய்துவந்தனர். இப்பிரச்சினையின் காரணமாக, முன்னதாக இறந்துபோனவரின் பணியாளரான இப்ராஹிம்/அ.சா.1, எ.1 முதல் எ.3 வரையிலானவர்களால் கடத்தப்பட்டார். இது தொடர்பாக இறந்துபோனவரால் குற்றப் புகார் ஒன்று கொடுக்கப்பட்டு, அது நிலுவையிலுள்ளது. இதன் காரணமாக, எ.1 முதல் எ.3 வரையிலானவர்கள் இறந்தவர் மீது பகை வளர்த்துக் கொண்டனர், அதன்பின்னர், அவர்கள் நாராயணன்/எ.7 உடன் சதித்திட்டமிட்டு எ.4 முதல் எ.6 வரையிலான கூலிப்படையை அமர்த்திக்கொண்டார். மேற்படி சதித்திட்டத்தை நிறைவேற்றும்பொருட்டு, 03.10.2003 அன்று காலை 7.00 மணியளவில் இறந்துபோனவர் அ.சா.1 உடன் வெள்ளைசாமி/அ.சா.17க்கு சொந்தமான டிஎன்-63-4806 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டரில் வந்து கொண்டிருந்தார். எதிரிகள் அருவாள்கள், வெட்டுக் கத்திகள் மற்றும் நாட்டு வெடிகுண்டுகள் ஆகியவற்றை வைத்துக்கொண்டு இறந்துபோனவருக்காக அறிவழகன் என்பவரின் தென்னந்தோப்பில் காத்துக்கொண்டிருந்தனர். முத்துராமலிங்கம் வந்ததும், அவர் மீது நாட்டு வெடிகுண்டு வீசி, அவருடைய உடல் முழுவதிலும் வகைதொகையின்றி தாக்கி, அவருக்கு மரணம் விளைவித்தனர். காயமடைந்த அ.சா.1, அ.சா.6ஆல் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அ.சா.4 ஆன கிராமத்தவர் சம்பவத்தைக் கண்ணுற்றார். தமிழ் சங்கு (விசாரணை தொடங்குவதற்கு முன்பே இறந்தவர்) என்பவர் 03.10.2003 அன்று காலை 8.00 மணியளவில் புகார் அளித்தார். மேற்படி புகார், காவல் ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்டது, இவர் வெடி பொருட்கள் சட்டம், 1908ன் பிரிவுகள் 3 மற்றும் 5 என்பதோடு இ.த.ச., பிரிவுகள் 147, 148, 341, 324, 307 மற்றும் 302ன் கீழான குற்றங்களுக்காக மு.த.அ.ஐ பதிவு செய்தார். மு.த.அ. மற்றும் புகார் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, 03.10.2003 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு பெற்றுக்கொள்ளப்பட்டது.

03.10.2003 அன்று காலை 9.00 மணிக்கு மு.த.அ.ஐ பெற்றுக்கொண்டவரான காவல் ஆய்வாளர், சம்பவ இடத்தை காலை 9.30 மணிக்கு பார்வையிட்டு புலனாய்வைத் தொடங்கினார். அவர் அ.சா.11 மற்றும் அ.சா.12ன் முன்னிலையில் பார்வை மகசர் (அ.சா.ஆ.1) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.35) தயார் செய்தார். பிரேத விசாரணை நடத்திய பின், இறந்துபோனவரின் சடலம், வேண்டுகோள் கடிதத்துடன் (அ.சா.ஆ.23) சடலக் கூறாய்வுக்காக அனுப்பப்பட்டது. சம்பவ இடத்திலிருந்து இரத்தக்கறை படிந்த மற்றும் படியாத மண்ணும், இதனுடன் இரண்டு ஜோடி செருப்புகள், டிராக்டரின் எஞ்ஜினின் மேல்புறத்திலிருந்து பஞ்சு துண்டுகள், வெடிகுண்டை மறைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட துணியின் 4 துண்டுகள், டிராக்டரின் ஸ்பீடோமீட்டரின் உடைந்த துண்டுகள் (அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.8) வரையிலானவை கைப்பற்று மகசரின் (அ.சா.ஆ.2) கீழ் கைப்பற்றப்பட்டன. இந்தப் பொருட்கள் படிவம் 91 (அ.சா.ஆ.19)ன் கீழ் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டன.

காயமடைந்த சாட்சியான அ.சா.1., ஒவ்வொரு எதிரியையும் அடையாளம் காட்டியதோடு, அவர்களின் வெளிப்படையான குற்றச் செயலையும் தெரிவித்தார். கைப்பற்றுவதற்கு துணைபுரிந்து ஒப்புதலுரை அளித்த ஒரு துணை சாட்சியான அ.சா.4 பிறழ் சாட்சியாக மாறிவிட்டார்.

குற்றச்சாட்டுகளை வனைந்து, தீர்ப்பு எழுதுக.

TNPSC - SPECIMEN

A-1 to A-3 are brothers. They all involved in illegal sand mining. They had a dispute with one Muthuramalingam / the deceased regarding mining of the sand illegally. In consequence to this dispute, earlier one Ibrahim / P.W.1, who was an employee of the deceased, was abducted by A1 to A3. In this regard a criminal complaint was given by the deceased and pending. Owing to this, A1 to A3 had developed a grudge against the deceased and consequently, had entered into a conspiracy with Narayanan / A7, who had engaged hirelings. A-4 to A-6. In furtherance of the said conspiracy, On 03.10.2003 at 7.00 a.m., the deceased along with P.W.1 came in a Tractor, bearing Registration No.TN-63-4806 owned by Vellaisamy / P.W.17. the accused who had gathered near a coconut grove of one Arivazhagan with sickles, bill-hook machete and country bombs, waiting for the deceased threw the country bomb and attacked Muthuramalingam indiscriminately all over body and caused his death. PW-1 who sustained injuries was taken to the hospital by PW-6. P.W.4, a Villager, had witnessed the occurrence. One Tamil Sangu, (who died prior to the commencement of the trial) had lodged a complaint at around 8.00 a.m., on 03.10.2003. The said complaint was recorded by the Inspector of Police, who registered the FIR for the offence under Sections 147, 148, 341, 324, 307 and 302 IPC, apart from Sections 3 and 5 of Explosive Substances Act, 1908. The FIR and complaint that were sent to the Judicial Magistrate's Court, was received on 03.10.2003 at 3.30 p.m.

The Inspector of Police, who had received the FIR at 9.00 a.m., on 03.10.2003, commenced the investigation by visiting the scene of occurrence on 9.30 a.m. He prepared the observation mahazar (Ex.P1) and rough sketch (Ex.P35), in the presence of P.W.11 and P.W.12. After conducting inquest, the body of the deceased was sent for autopsy with a requisition letter (Ex.P23). The soil, with and without blood stains at the scene of occurrence, was taken along with two pairs of slippers, cotton pieces from the top of the engine of the Tractor, 4 pieces of cloth used to cover the bomb, the broken pieces of speedometer of the Tractor (PMO.1 to PMO.8) under seizure mahazar (Ex.P2). These articles were sent to the Court under Form 91 (Ex.P19).

PW-1 the injured witness identified each of the accused and their overt act in the crime. PW-4 the bystander, one witness to the confession leading to recovery turned hostile.

Frame charges and write judgment.

TNPSC - SPECIMEN

**வினா எண் 4:**

குற்றஞ்சாட்டப்பட்டவர் சென்னை, மயிலாப்பூர் கிளை பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து பணப் பற்றுக் கடன் வாங்கினார். ரூ. 50 இலட்சம் கடனுக்காக, ரூ. 1 கோடி மதிப்புள்ள சொத்து துணைப் பிணையமாகக் கொடுக்கப்பட்டது. மூல ஆவணம், பத்திர அடைமானமாக வைக்கப்பட்டது. பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவர் வட்டியுடன் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டார். பத்திர அடைமானமாக வைக்கப்பட்ட மூல ஆவண அடைமானச் சொத்தின் மீது வங்கி நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது, அந்த ஆவணம் உண்மையானதல்ல என வங்கி கண்டறிந்தது. எனவே குற்றமுறு நம்பிக்கை மோசடி, ஏமாற்றுதல் மற்றும் பொய்யாவணம் புனைதல் போன்ற குற்றத்திற்கான முறையீடு செய்யப்பட்டது. எதிர்மனுதாரரான காவல்துறை புலனாய்வுக்குப் பின்னர், துணைப் பிணையமாகக் கொடுக்கப்பட்ட மூல ஆவணம் பொய்யாவணம் என்ற அறிவியல் நிபுணரின் கருத்துடன் இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்தது. சம்பந்தப்பட்ட ஆள்வரையின் சார்பதிவாளர், பிரச்சினைக்குரிய ஆவணம் உண்மையானதல்ல என்று வாக்குமூலம் அளித்துள்ளார்.

எந்தக் குற்றங்களுக்காக நீவிர் குற்றச்சாட்டுகள் வனைவீர்கள்? அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிந்த பிறகு, விசாரணை நிலுவையிலிருக்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவர் வட்டியுடன் மொத்த கடன் தொகையையும் வங்கிக்கு திருப்பிச் செலுத்திவிட்டு, பேரம் பேசும் வேண்டுகோளை வைப்பதற்காக விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்கிறார் எனில், இதற்கு நீவிர் எவ்வாறு நடவடிக்கை எடுப்பீர்? மேலும் இதில் உங்களுடைய தீர்ப்பு என்ன?

The accused borrowed cash credit loan from State Bank of India, Mylapore Branch, Chennai. For the loan of Rs 50 lakhs, property worth Rs 1 crore given as collateral security. The title document deposited to create equitable mortgage. Later the accused failed to repay the loan amount with interest. When the bank wanted to proceed against the property mortgaged by deposit of title deed creating equitable mortgage, the bank found the document is not genuine. Hence complaint for criminal breach of trust, cheating and forgery. The respondent police after investigation, filed final report along with the opinion of the scientific expert that the tital document given as collateral security is a false document. Sub Registrar of the concern jurisdiction given statement that the disputed document not genuine.

For what offences you will frame charges? If, pending trial after examination of prosecution witnesses, the accused repays the entire loan amount with interest to the bank and file an application for plea bargain. How will you proceed and what will be your judgment?

---

TNPSC - SPECIMEN

**HCCJMIV/23**

பதிவு எண் / Register No.

| |
|---|
| |

சட்டத் தாள் III

# LAW PAPER III

(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

**(Tamil & English Versions)**

நேரம் : 3 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

Duration : 3 Hours | Max. Marks : 100

*தேர்வர்களுக்கான பொதுவான குறிப்புகள் :*

*General Instructions to Candidates :*

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண்கள், ஆவணங்களின் விபரங்கள், தரப்பினர்களின் பெயர் மற்றும் சாட்சிகள் ஆகியவை கற்பனையே. இருப்பினும், தேர்வர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

The facts and particulars provided in the Question Paper i.e., the court's name, place, case numbers, documents details, names of parties and witnesses are fictional. Yet candidates have to conclusively assume them to be true for the purpose of answering the questions.

ii) தேர்வர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடை அளிக்க வேண்டும். ஆனால் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாறிமாறி விடையளிக்க கூடாது.

Candidates may write the answers either in English or in Tamil but not in both.

TNPSC - SPECIMEN

iii) வினாத்தாளானது தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. ஏதேனும் சந்தேகம் இருப்பின், ஆங்கில வடிவே இறுதியானது.

The Question Paper is provided in Tamil and English versions. In all matters and in cases of doubt, English version is final.

iv) தேர்வர்கள் தங்களை நீதிமன்றத்தின் நடுவராக அனுமானித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விக்குரிய விபரங்களை பரிசீலித்து ஒவ்வொரு குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக தேவையான குற்றச்சாட்டுகளை வனைந்து கொடுக்கப்பட்ட சங்கதிகள் அடிப்படையில் தீர்ப்பை எழுத வேண்டும்.

The candidates have to assume themselves as Presiding Officers and to consider the details furnished in the question and frame necessary charges specifically against each accused if required and write judgment on the facts given.

v) தேர்வர்கள் வழக்கின் தலைப்பு, வழக்கு எண், நீதிபதியின் பெயர், வழக்கு எண், ஆவணங்களின் பட்டியல், தரப்பினர்களுக்காக ஆஜராகும் வழக்கறிஞர்களின் பெயர்கள், ஆவணங்களின் பட்டியல் மற்றும் சான்று போன்றவற்றை எழுதத் தேவையில்லை. அவ்வாறு எழுதினாலும் வழக்கின் தலைப்புக்கு மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது. வழக்கின் சங்கதிகள் மற்றும் சாட்சியங்களை பரிசீலிக்கும் விதம், சங்கதிகளுக்கு பொருந்தும் சட்டத்தை பரிசீலிக்கும் விதம் மற்றும் வினாக்களுக்கு தேர்வர்கள் எழுதும் முடிவுக்கான காரணங்களின், அடிப்படையிலேயே மதிப்பெண்கள் வழங்கப்படும்.

Candidates need not write the cause title of the case, case number, name of the judge, case number, names of the counsel appearing for the parties, list of documents, evidence etc, which would be indicative in nature. No marks will be awarded for writing the cause title etc. Marks will be awarded based on the appreciation of facts and evidence, application of law on the facts, reasoning given by the candidates for arriving at whatever conclusion they have reached.

vi) இந்தப் பிரிவில் நான்கு கேள்விகள் உள்ளன. ஒவ்வொரு கேள்வியும் 25 மதிப்பெண்களை கொண்டது.

There are 4 questions in this section and each question carries 25 marks.

vii) வினாக்களுக்கு விடையளிக்கும்போது முன் தீர் முடிவு வழக்கின் விவரப்பட்டியலை அளிக்க வேண்டியதில்லை. தவறான அல்லது முழுமை பெறாத விபரப்பட்டியலை வழங்குதல் தேர்வர்களுக்கு பாதகமாக அமையும்.

The candidates need not provide cause title with citation while answering questions. Providing wrong or incomplete cause title or quoting a wrong citation will be detrimental to the candidates.

viii) சிறப்புச் சட்டங்கள் தொடர்பான கேள்விகளில் தேர்வர்கள் குற்றச்சாட்டுகளை வனையத் தேவையில்லை.

The candidates need not frame charges in the questions relating to Special Acts.

TNPSC - SPECIMEN

1. $98\frac{1}{2}$ சென்ட் நிலத்தை எழுதிக் கொடுக்கவும், முன்பணமாக பெறப்பட்ட மிகைத் தொகையைத் திருப்பிச் செலுத்தவும் அல்லது அதற்கு மாற்றாக மொத்த பொறுப்புறுதிப் பணத்தையும் வட்டியுடன் திருப்பியளிக்கவும் பரிகாரத்தை வரையறுத்து ஏற்றதை ஆற்றுவதற்காக உரிமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

**வழக்குரை :**

வாதி, வழக்குச் சொத்தினை தொகை ரூ. 15,00,000/-ல் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) தொகை ரூ. 10,00,000/- முன்பணமாகச் செலுத்தி 02/09/2009 அன்று கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டார். ஒப்பந்தத்தை முடிப்பதற்காக ஏழு மாத கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டது. 2 ஏக்கர் நிலம், ஒரு கிணறு மற்றும் வழிபாதை உரிமையுடன் கொண்ட நிலப்பரப்பை விற்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. வாதி மீதக் கிரையத் தொகையைக் கொடுத்து கிரைய நடவடிக்கையை முடிப்பதற்கு தயாராகவும், விருப்பமுடனும் பிரதிவாதிகளை அணுகினார், அவர்கள் குறித்த காலத்திற்குள் ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் தேவையின்றி காலந்தாழ்த்தினர். இதற்கிடையில், சில 3ம் தரப்பினர்கள் வழக்குச் சொத்தின் ஒரு பகுதி மீது உரிமை கோரத் தொடங்கினர். ஆகவே, வாதி, பிரதிவாதிகளுக்கும் அந்த 3ம் தரப்பினர்களுக்கும் 30/03/2010ம் தேதியிடப்பட்ட அறிவிப்பை அனுப்பினார். விற்பவர்களான பிரதிவாதிகள் அறிவிப்புக்கு பதிலளிக்கவில்லை. 3ம் தரப்பினர்கள், பிரதிவாதிகளால் நிறைவேற்றப்பட்ட கிரைய பத்திரங்கள் மூலமாக புல எண் 210/18 A ல் உள்ள 2.83 ஏக்கர் நிலத்திலிருந்து சுமார் $1.84\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தில் தங்களுக்குள்ள உரிமையை உறுதிபட தெரிவித்து பதிலளித்தனர். பிரதிவாதிகள் $98\frac{1}{2}$ சென்ட் நிலத்தைதான் வைத்திருந்தனர், ஆனால் பிரதிவாதிகள் 2.00 ஏக்கர்கள் எனத் திரித்துக்கூறி கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

அறிவிப்புக்குப் பிறகு, பிரதிவாதிகள், வாதியை அணுகி, விற்கப்படாமல் உள்ள மீதமுள்ள $98\frac{1}{2}$ சென்ட் பரப்பளவு கொண்ட நிலத்தை, சென்ட் ஒன்றுக்கு ரூ. 7,500/- என்ற விலையில் விற்கவும், வித்தியாசத் தொகையான ரூ. 2,61,250/-ஐ திருப்பியளிக்கவும் X மற்றும் Y என்ற கிராம பெரியவர்களின் முன்னிலையில் வாக்குறுதியளித்தனர். எனவே பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட ரூ. 10,00,000/- முன்பணத்திலிருந்து ரூ. 7,38,750/- ஐ வைத்துக்கொண்டு, மீதி ரூ. 2,61,250/-ஐ திருப்பிக் கொடுத்திருக்க வேண்டும். பிரதிவாதிகள் மேற்படியான நடவடிக்கையை மதிக்காததால், பிரதிவாதிகளுக்கு 03/10/2011 அன்று அறிவிப்பு அனுப்பும்படியானது, அதனைத் தொடர்ந்து, $98\frac{1}{2}$ சென்டுக்கான கிரையப் பத்திரத்தைப் பதிவு செய்யவும், ரூ. 2,61,250/- ஐ திருப்பியளிக்கவும் அல்லது அதற்கு மாற்றாக பகுதி கிரையத் தொகையாக கொடுக்கப்பட்ட ரூ.10 இலட்சம் பொறுப்புறுதி பணம் முழுவதையும் ஆண்டொன்றுக்கு 9% வட்டியுடன் திருப்பியளிக்கவும் ஏற்றதை ஆற்றுவதற்கான வழக்கிடப்பட்டது.

TNPSC - SPECIMEN

**எதிர் வழக்குரை :**

வழக்குச் சொத்து திரு. பாஸ்டர் ஜான் வில்லியம் கேரே என்பவருக்குச் சொந்தமானது என்றும், அவர் 31/10/1994ம் தேதியிடப்பட்ட கிரையப் பத்திரத்தின் கீழ் அதை வாங்கினார் என்றும் இரண்டாம் பிரதிவாதி ஒப்புக்கொள்கிறார். அவரது இறப்புக்குப் பிறகு, 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளான அவரது மனைவியும் குழந்தைகளும் அவற்றை மரபுரிமையாகப் பெற்று, கூட்டுரிமையாளரானார்கள். வாதியின் மற்ற கூற்றுகள் யாவும் முற்றிலும் பொய்யானவை. வாதி 02/09/2009 அன்று 2 ஏக்கர் நிலத்திற்கு மொத்த கிரையத் தொகையான ரூ. 15 இலட்சத்தில் ரூ. 10 இலட்சத்தை முன்பணமாகக் கொடுத்து பிரதிவாதிகளுடன் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டார் என்ற அவரது கூற்று மறுக்கப்படுகின்றது. வாதி ஒருபோதும் பிரதிவாதியை அணுகவில்லை, மேலும் அவர் பிரதிவாதிகளிடமிருந்து கிரையப் பத்திரத்தை நிறைவேற்றிப் பெறுவதற்கு எந்தக் காலகட்டத்திலும் தயாராகவும் விருப்பமுடனும் இருந்ததேயில்லை. உண்மையில், வாதியிடம் இருப்பதாகச் சொல்லப்படும் கிரையப் பத்திரம் கடனுக்காக கொடுக்கப்பட்ட ஒரு பிணையமேயாகும், கடன் தீர்க்கப்பட்டுவிட்டதால் வாதியால் அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படும் 30/03/2010ம் தேதியிடப்பட்ட அறிவிப்புக்குப் பதிலளிக்கத் தேவையில்லை. விற்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட நிலத்தின் அந்தப் பகுதி மூன்றாந்தரப்பினர்களுக்கு உடைமை மாற்றம் செய்யப்பட்டது என்ற வாதம் மறுக்கப்படுகிறது. பிரதிவாதிகள் எஞ்சிய $98\frac{1}{2}$ சென்ட் நிலத்தை ரூ. 7,500/- என்ற வீதத்தில் விற்பதற்கு வாய்மொழியாக ஒப்புக்கொண்டனர் என்று கூறுவது பொய் எனக் கூறி மறுத்துரைக்கப்படுகிறது. வழக்கு கிரைய ஒப்பந்தமே செயற்படுத்தத்தக்கதல்ல என்பதால், வாதியின் சார்பாக கிரையப் பத்திரம் நிறைவேற்றியது குறித்த பிரச்சினை எழவே எழாது. நீண்ட காலமாக அமைதியாக இருந்துவிட்டு, மாற்றுப் பரிகாரத்துடன் ஏற்றதை ஆற்றுவதற்கான உரிமை வழக்கு காலந்தாழ்ந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அது முற்றிலும் பொய்யானது என்பதால் அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுவதற்குரியதாகும். கிரைய ஒப்பந்தம் செல்லத்தக்கது என அனுமானித்துக் கொண்டாலுங்கூட, ஒப்பந்தத்தை முடிப்பதற்கான காலம் 02/09/2009லிருந்து 7 மாத காலமாகும். உரிமை வழக்கு 03/11/2011 அன்றுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, வாதி அவரது ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராகவும் விருப்பமுடனும் இல்லாமல் புனைக் கூற்றுடன் உரிமை வழக்கைக் காலந்தாழ்ந்து தாக்கல் செய்துள்ளார் என்றும் தீர்மானிக்க இச்சங்கதியே சான்றாகிறது.

அந்தந்த தரப்பினர்களின் வாதுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. வாய்மொழி ஒப்பந்தத்திற்கு வாதி, பிரதிவாதி மற்றும் X சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

வழக்கெழு வினாக்களை வனைந்து, தீர்ப்பு எழுதுக.

TNPSC - SPECIMEN

The suit filed for specific performance restricting the relief to execute 98 $\frac{1}{2}$ cent of land and to refund the excess amount received as advance or in alternate to refund the entire earnest money with interest.

**Plaint :**

The plaintiff entered into an sale agreement on 02/09/2009 in respect of the suit property for a sum of Rs. 15,00,000/- (Rupees Fifteen Lakhs only) and paid advance of Rs. 10,00,000. Seven month time was fixed for completion of the contract. The extent of land agreed to be sold was 2 acres land, a well and passage right. While the plaintiff was ready and willing to complete the sale transaction and approached the defendants to execute the sale deed on receipt of the balance sale consideration, they unnecessarily postponed the completion of the contract with the time fixed. Meanwhile, some 3rd parties started claiming right over portion of the suit property. So, the plaintiff caused notice dated 30/03/2010 to the defendants and to those 3rd parties. The defendants who are vendors did not reply to the notice. The 3rd parties replied asserting their right over about 1.84$\frac{1}{2}$ acres of land out of 2.83 acres of land in S.No. 210/18 A through sale deeds executed by the defendants. A defendants hold only 98 $\frac{1}{2}$ cents of land but by misrepresentation entered into sale agreement for 2.00 Acres.

After notice, the defendants approached the plaintiff and orally promised in the presence of village elders X and Y, to sell the remaining extent of 98 $\frac{1}{2}$ cents left unsold at the rate of Rs. 7,500/- per cent and refund the difference money Rs. 2,61,250/-. Thus the defendants after retaining Rs. 7,38,750/- from out of the advance of Rs. 10,00,000/- received, should return the balance Rs. 2,61,250/-. The defendants did not honour the said commitment which lead to causing notice to the defendants on 03/10/2011 and subsequently the suit for specific performance to register the sale deed for 98 $\frac{1}{2}$ cents and refund Rs. 2,61,250/- or in alternate to return the entire earnest money of Rs.10 lakhs paid towards part sale consideration, with interest at the rate of 9% pa.



TNPSC - SPECIMEN

**Written Statement :**

The second defendant admits the suit property belong to one Mr. Pastor John William Carey, who purchased it under a sale deed dated 31/10/1994. After his demise, defendants 2 to 5 who are his wife and children succeeded the same and became the joint owners. The other averments of the plaintiff are absolutely false. The claim of the plaintiff that he entered into a sale agreement with the defendants on 02/09/2009 and advanced Rs.10 lakhs as against the total sale consideration of Rs.15 lakhs for 2 acres of land are denied. The plaintiff had never ever approached the defendants and he was not at all ready and willing at any point of time to get the sale deed executed from the defendants. In fact the alleged sale agreement with the plaintiff was executed only as a security for the loan, as the loan was discharged there was no necessity to reply the alleged notice dated 30/03/2010 sent by the plaintiff. The averment that part of the land agreed to sell was alienated to third parties are denied. The claim that the defendants orally agreed to sell the remaining $98\frac{1}{2}$ cents of land at the rate of Rs. 7,500/- cents are denied as false. Since the suit sale agreement itself is not enforceable, the question of executing sale deed in favour of the plaintiff does not arise at all. After keeping silent for long time, belatedly the suit for specific performance with alternate relief is filed, which is liable to be dismissed being laid with absolute falsehood. Even assuming the sale agreement is valid, the time for completion of contract was 7 months from 02/09/2009 and the suit filed only on 03/11/2011 this fact is proof to hold the plaintiff was not ready and willing to perform his contract and laid the suit belatedly with concocted version.

The documents referred in the pleadings of respective parties marked. The plaintiff, defendant and X as witness to oral agreement examined.

Frame issues and write judgment.

2. பணக் கடனை வசூலிப்பதற்கான கோயம்புத்தூர் கிளை பரோடா வங்கியால் முதன்மைக் கடனாளர் மற்றும் உத்தரவாதம் அளித்தவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படும் உரிமை வழக்கு.

**வழக்குரை கூற்றுகளின் சுருக்கம் :**

வாதி ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஆகும். அதன் வங்கி மேலாளர் அதற்கு சார்பாளர் ஆவார். முதல் பிரதிவாதி 01/01/2000 அன்று வங்கியிலிருந்து ஆண்டொன்றுக்கு 12% வட்டிக்கு ரூ. 1,50,000/- ஐ கடன் பெற்று, ஒரு கடனுறுதிச் சீட்டை எழுதிக் கொடுத்தார். வணிக சரக்கிருப்புகள் முதன்மை பிணையமாக அடைமானம் வைக்கப்பட்டன. இரண்டாம் மற்றும் மூன்றாம் பிரதிவாதிகள் கடனுக்கு உத்தரவாதம் அளித்தவர்களாவர். 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள்

TNPSC - SPECIMEN

உத்தரவாத ஆவணத்தை எழுதிக்கொடுத்ததோடு, தங்களுடைய தேசிய சேமிப்புப் பத்திரங்களை வங்கியிடம் துணைப் பிணையமாக அடகு வைத்தனர். முதலாம் பிரதிவாதி கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டார். 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு கடனைத் திருப்பிச் செலுத்த 30/04/2002 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. அவர்கள் அறிவிப்பைப் பெற்றுக்கொண்டும், கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்த முன்வரவில்லை.

முதல் பிரதிவாதி வரவில்லை. இரண்டாம் மற்றும் மூன்றாம் பிரதிவாதி எதிர் வழக்குரையைத் தாக்கல் செய்து உரிமை வழக்கை எதிர்த்தார்.

**எதிர் வழக்குரை கூற்றுகளின் சுருக்கம் :**

பிரதிவாதிகளும் வாதியும் ஒருவரையொருவர் அறிந்தவர்கள். வாதி கடனை 2 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்திவிடுவதாக உறுதியளித்ததன்பேரில், அவர்கள் கடனுக்கான துணைப் பிணையமாக தேசிய சேமிப்புப் பத்திரங்களைக் கொடுத்தார். கடன் வழங்குவதற்காக வங்கி ரூ. 1,50,000/- க்கான கடனுறுதிச் சீட்டையும், ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள வணிக சரக்கிருப்புகளை அடைமானமாகக் கேட்டுப் பெற்றுக்கொண்டது. கடனைத் திருப்பிச் செலுத்தாததை அவர்கள் அறிந்தபோது, முதலாம் பிரதிவாதி அடைமானம் வைக்கப்பட்ட பொருட்களை விற்றுவிட்டார், மேலும் அடைமானப் பொருட்களின் விற்பனை வங்கியின் சம்மதத்துடன் நடந்ததா? எனக் கேட்டு வாதியான வங்கிக்கு பிரதிவாதிகள் கடிதம் எழுதினர். வங்கி தங்களுக்கு எதுவும் தெரியாது என பதிலளித்தது. முதலாம் பிரதிவாதி அடைமானம் வைக்கப்பட்ட பொருட்களை முறைகேடாகவும், சட்ட விரோதமாகவும் விற்பனை செய்துவிட்டதைக் குறித்து 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் வங்கிக்கு மீண்டும் கடிதம் எழுதி தெரிவித்தனர்.

முதலாம் பிரதிவாதி, முதன்மை பிணையமாக அடைமானம் வைக்கப்பட்ட பொருட்களை 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு தெரியாமலும், சம்மதத்தைப் பெறாமலும் விற்றுவிட்டார். ஆகையால் உத்தரவாதம் அளித்தவர்களான 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் வங்கிக்கு கடன் செலுத்துவதற்குரியவர்களல்லர்.

வங்கி மேலாளர் வா.சா. 1 ஆக விசாரிக்கப்பட்டார். 3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

முதல் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதிச் சீட்டு வா.சா.ஆ. 1 ஆகும்.

முதல் பிரதிவாதியால் அடைமானம் வைக்கப்பட்ட வணிக சரக்கிருப்பு ஆவணம் வா.சா.ஆ. 2 ஆகும்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் பிரதிவாதிகளால் அடைமானம் வைக்கப்பட்ட தேசிய சேமிப்புப் பத்திரம் வா.சா.ஆ. 3 ஆகும்.

இரண்டாம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். வாதியான வங்கிக்கு அவர்கள் எழுதிய கடிதங்கள் பி.சா. 1 மற்றும் பி.சா. 2 ஆக குறியீடு செய்யப்பட்டன.

வழக்கெழு வினாக்களை வனைந்து, தீர்ப்பு எழுதுக.



TNPSC - SPECIMEN

Suit by Bank of Baroda, Coimbatore Branch for realization of money lend against the principal borrower and the guarantors.

**Gist of the plaint averments :**

The plaintiff is a nationalized bank represented by its Branch Manager. The first defendant is the borrower loan of Rs. 1,50,000/- for interest at the rate of 12% pa from the Bank on 01/01/2000 and had executed a pro note. The stocks in trade was hypothecated as primary security. The second and third defendants are the guarantors for the loan. The defendants 2 and 3 had executed a deed of guarantee and had pledged their National Savings Certificates with the bank as collateral security. The first defendant failed to repay the loan amount. Notice to discharge the debt sent on 30/04/2002 sent to defendants 1 to 3. They received the notice but they did not turn to repay the loan amount with interest.

First defendant remained absent. Second and third defendant filed written statement and contested the suit.

**Gist of the written statement averments :**

The defendants and the plaintiff know each other. On the assurance of the plaintiff that he will repay the loan within 2 years, they gave the National Savings Certificates as a collateral security for the loan. For the loan advanced the bank had secured demand promissory note for Rs. 1,50,000/- and hypothecation of stock in trade worth Rs. 3 lakhs. When they came to know that without repaying the loan, the first defendant had sold the goods hypothecated, the defendants wrote to the plaintiff Bank and enquired whether the sale of the hypothecated goods was with the consent of the Bank. The bank replied it was not within their knowledge. The defendant 2 and 3 again wrote to the bank informing about the irregularity and illegal sale of hypothecated goods by the first defendant.

The first defendant had disposed the hypothecated goods which is the primary security without the knowledge and consent of the defendants 2 and 3. Therefore the 2nd and 3rd defendants as guarantors are not liable to pay the bank.

Bank Manager was examined as PW-1. Marked 3 documents.

Ex A-1 Pronote by first defendant.

Ex A-2 Deed of hypothecation of goods in trade by D-1.

Ex A-3 Deed of pledge of NSS by D 2 and D3.

The Second defendant was examined as DW-1. Marked Ex B-1 and Ex B-2 : Their Letters to the plaintiff bank.

Frame issues and write judgment.

TNPSC - SPECIMEN

3. 31/01/2005ம் தேதியிடப்பட்ட கிரைய ஒப்பந்தத்தின் ஏற்றதை ஆற்றுவதற்கான உரிமை வழக்கு.

**வழக்குரை கூற்றுகள் :**

பிரதிவாதி வழக்கு அட்டவணைச் சொத்தின் உரிமையாளர் ஆவார். பிரதிவாதி அதனை ரூ. 25 இலட்ச மறுபயனுக்காக விற்க ஒப்புக்கொண்டு, ரூ.15 இலட்சம் முன்பணமாகப் பெற்றுக்கொண்டார். தரப்பினருக்கிடையே 31/01/2005 அன்று கிரைய ஒப்பந்த பத்திரம் நிறைவேற்றப்பட்டது. ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான கால அவசாகம் 21 மாதங்கள் என நிர்ணயிக்கப்பட்டது. வாதி 30/04/2006 அன்று மீதக் கிரையத் தொகையான ரூ. 10 இலட்சத்தைச் செலுத்தியதன்பேரில், வழக்கு அட்டவணைச் சொத்தின் உடைமை பிரதிவாதியால் ஒப்படைக்கப்பட்டது. வாதி அதனைக் கவனித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. பலமுறை கேட்டும் பிரதிவாதி கிரைய பத்திரம் எழுதி தர தயாராக இல்லை. சார்பதிவாளர் அலுவலகம் வந்து கிரைய பத்திரத்தை பதிவு செய்து தருமாறு பிரதிவாதிக்கு 10/11/2006 அன்று அனுப்பிய அறிவிப்பு திரும்பி வந்துவிட்டது. பிரதிவாதி மூன்றாம் தரப்பினருக்கு சொத்தை உடைமை மாற்றம் செய்துவிடலாம் என அஞ்சி, 04/07/2007 அன்று நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான வழக்கு தாக்கல் செய்யப்பட்டது, தேவைப்பட்டால் ஏற்றதை ஆற்றுவதற்கான தனி வழக்கு தாக்கல் செய்யப்படவும் உ.வி.மு.ச., கட்டளை II, விதி 2ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பின்னர், ஏற்றதை ஆற்றுவதற்கு அல்லது அதற்கு மாற்றாக கொடுக்கப்பட்ட முன்பணத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுக்கவும் 21/08/2008 அன்று தற்போதைய உரிமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

**எதிர் வழக்குரையின் சுருக்கம் :**

வழக்கு ஒப்பந்தம் சொத்தினை விற்பனை செய்வதற்கானதல்ல. அது கடனுக்கான பிணையமாக நிறைவேற்றப்பட்டதாகும். சொத்தின் மதிப்பு ரூ.2 கோடிக்கும் மேலானதாகும். நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான உரிமை வழக்கு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட பின், அதனைத் தொடர்ந்து ஏற்றதை ஆற்றுவதற்காக தாக்கல் செய்யப்படும் உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. அறிவிப்பு நாளிலிருந்து 2 ஆண்டுகள் கழித்து தாமதமாகத் தாக்கல் செய்யப்படும் உரிமை வழக்கு பாதிப்படைவதோடு வாதி ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராகவோ விருப்பமுடனோ இல்லை என்பதை மெய்ப்பிக்கிறது.

வாதியும், பிரதிவாதியும் வா.சா.1 மற்றும் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டனர். கிரைய ஒப்பந்தமும் அறிவிப்பும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகும். சார்-பதிவாளர் அலுவலகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட சொத்துக்கான வழிகாட்டி மதிப்பு நீதிமன்ற சான்றாவணம் நீ.சா.ஆ.1 ஆக குறியிடப்பட்டது.

வழக்கெழு வினாக்களை வனைந்து, தீர்ப்பு எழுதுக.

Suit for specific performance of an agreement of sale dated 31/01/2005.

**Plaint averments :**

The defendant is the owner of the suit schedule property. The defendant agreed to sell it for a consideration of Rs. 25 lakhs and received advance of Rs. 15 lakhs. The deed for agreement to sell entered between the parties on 31/01/2005. The time for

TNPSC-SPECIMEN

completing the contract was fixed as 21 months. On 30/04/2006, the plaintiff paid the balance sale consideration of Rs. 10 lakhs and was put in possession of the suit schedule property by the defendant. The plaintiff was asked to be its care taker. The plaintiff requested the defendant to execute the sale deed. Depite repeated demands, the defendant not willing to execute the sale deed. Notice sent on 10/11/2006 calling upon the defendant to come to the Sub Registrar Office and execute the sale deed, returned unserved. Fearing the defendant may alienate the property to third party, suit for permanent injunction filed on 04/07/2007 with leave under Or II Rule 2 of CPC to file separate suit for specific performance, if required. Thereafter, the present suit laid on 21/08/2008 for specific performance or in alternate to return the money advanced with interest.

**Gist of the Written Statement :**

The suit agreement was not intended to sell the property. It was executed as security for the loan. The value of the property is more than 2 Crores of rupees. The subsequent suit for specific performance not maintain after filing the earlier suit for permanent injunction. The suit filed after 2 years from the date of notice suffers laches and proves the plaintiff was not ready or willing to execute the agreement.

The plaintiff and the defendant examined as PW-1 and DW-1. The sale agreement and notice are EX A-1 and Ex A-2. The guideline value for the property summoned from Sub Registrar Office marked as court exhibit Ex C-1.

Frame issues and write judgment.

TNPSC - SPECIMEN

4. வழக்கு அட்டவணைச் சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீனத்தில் குறுக்கிடுவதிலிருந்து பிரதிவாதியையும், அவரது ஆட்களையும், முகவரையும் தடுக்கின்ற நிரந்தர உறுத்துக் கட்டளைக்கான உரிமை வழக்கு.

**வழக்குரை கூற்றுகளின் சுருக்கம் :**

வழக்குச் சொத்து முதலில் உரும கவுண்டர் என்பவருக்கு சொந்தமானது ஆகும். அவரது இறப்பின்பேரில் சொத்து அவரது மகனை வந்தடைந்தது. வாதிக்கு 2 மகன்கள் இருந்தனர். சுப்ரமணி என்ற அவரது ஒரு மகன் அவரது தந்தைக்கு (வாதிக்கு) முன்பாக இறந்துவிட்டார். காலம் சென்ற சுப்ரமணியின் மனைவி சொத்து தொடர்பான 10/12/2009 ம் தேதியிடப்பட்ட விடுதலை பத்திரத்தை நிறைவேற்றினார். வாதி வழக்குச் சொத்தின் முழுமையான சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருக்கிறார். பட்டா, அடங்கல், கிஸ்தி சீட்டுகள் போன்றவையும் வாதியின் பெயரில் உள்ளன.

வாதி, பிரதிவாதியிடமிருந்து ரூ. 5,000/- கடன் வாங்கினார். அதற்காக பிரதிவாதி வெற்று முத்திரைத் தாள்களில் கையெழுத்துப் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர், கடன் திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டது, ஆனால் பிரதிவாதி வெற்று முத்திரைத் தாள்களைத் திருப்பித் தரவில்லை. அதனைத் தொடர்ந்து, பிரதிவாதி வழக்குச் சொத்தை வாங்குவதற்கு அடிமாட்டு விலைக்கு கேட்டார். ஆனால் வாதி அதற்கு மறுத்துவிட்டார். இதனால் கோபமடைந்து, பிரதிவாதி வாதியிடமிருந்து பெற்ற வெற்று முத்திரைத் தாள்களைத் தவறாகப் பயன்படுத்தியதோடு, 25/12/2000 அன்று கிரைய மறுபயனாக ரூ. 1,23,000/- பெற்றுக்கொண்டு உடைமையை ஒப்படைத்தது போல பொய்யாக ஓர் ஆவணத்தை புனைந்து, 17/04/2011 அன்று பிரதிவாதியும் அவரது ஆட்களும் வழக்கு சொத்துக்குள் அத்துமீறி நுழைந்து, அறுவடை பருவத்திலிருந்த பயிர்களை அறுவடை செய்ய முயன்றனர். மிகுந்த சிரமத்துடன் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. மீண்டும் இதுபோன்ற முயற்சி செய்யாமலிருக்க, வாதி நிரந்தர உறுத்துக் கட்டளைக்காக வேண்டினார்.

**எதிர் வழக்குரையின் சுருக்கம் :**

வழக்குச் சொத்து வாதிக்குச் சொந்தமானது. வாதி சொத்தை 25/12/2000 அன்று விற்று, கிரைய ஒப்பந்தம் நிறைவேற்றிய பின், சுவாதீனத்தை ஒப்படைத்தார். பதிவு செய்வதற்கு பத்திரத்தில் இரண்டு ஆண்டுகள் குறிப்பிடப்பட்டிருந்ததாலும், நெருங்கிய உறவுமுறையைக் கருத்திற்கொண்டும், பத்திரம் உடனடியாகப் பதிவு செய்யப்படவில்லை, இருந்தாலும் பிரதிவாதிக்கு சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது. சுவாதீனத்தை எடுத்துக்கொண்ட பின், பிரதிவாதி கரும்பு பயிரிட்டார். அது அறுவடைக்கு தயாரானது. பிரதிவாதி கிரையப் பத்திரத்தை பதிவு செய்வதற்காக வாதியை அணுகியபோது, அவர் மறுத்துவிட்டார். பிரதிவாதி காவல்துறையினரிடம் குற்றப் புகார் அளித்தார். அதன் விசாரணை நிலுவையிலுள்ளது. பிரதிவாதியின் உரிமையைச் சிதைக்கும் பொருட்டு, 17/04/2011 அன்று பிரதிவாதியும், அவரது ஆட்களும், முகவர்களும் வழக்குச் சொத்துக்குள் அத்துமீறி நுழைந்து பயிரை அறுவடை செய்ய முயன்றதைப்போன்று ஒரு கற்பனையான வழக்குமூலத்துடன் நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குச் சொத்து 25/12/2000 முதற்கொண்டு பிரதிவாதியின் சுவாதீனத்திலேயே இருந்து வருகிறது. மேலும் அச்சொத்தில் பிரதிவாதியால்தான் பயிர்கள் நடவு செய்யப்பட்டது.

வாதி வழக்குச் சொத்துக்கான பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் கிஸ்தி சீட்டுகள் போன்றவற்றை சார்ந்துநின்றார். பிரதிவாதி 25/12/2000ம் தேதியிடப்பட்ட பதிவு செய்யப்படாத கிரையப் பத்திரத்தையும், காவல்துறையில் வாதி மீது அளிக்கப்பட்ட புகாரின் நகல் மீதும் சார்ந்து நின்றார்.

வழக்கெழு வினாக்களை வனைந்து, தீர்ப்பு எழுதுக.

Suit for permanent injunction, restraining the defendant, his men and agent from interfering the peaceful possession of the plaintiff over the suit schedule property.

**Gist of the plaint averments :**

The suit property originally belongs to one Uruma Gounder. On his demise, the property devolved on his son the plaintiff. The plaintiff had 2 sons. One of his son by name Subramani predeceased his father (plaintiff). The widow of Subramani executed a relinquish deed dated 10/12/2009 in respect to the suit property. The plaintiff is in absolute possession and enjoyment of the suit property. Patta, adangal, kist receipts are in the name of the plaintiff.

TNPSC - SPECIMEN

From the defendant, the plaintiff borrowed Rs. 5,000/-. For which the defendant obtained signatures of the plaintiff in blank stamp papers. The loan repaid subsequently but the defendant did not return the blank signed stamp papers. Subsequently the defendant sought to purchase the suit property for a song, but the plaintiff refused. Infuriated, the defendant had misused the blank signed stamp papers obtained from the plaintiff and had fabricated a document as if the plaintiff had sold the suit property on 25/12/2000 for Rs. 1,23,000/- and handed over the possession after receiving the sale consideration. On 17/04/2011 the defendant and his men trespassed into the suit property and attempted to reap the standing crops, which was ripe for harvest. With much difficulty the attempt was thwarted. To prevent recurrence of such attempt, the plaintiff pray for permanent injunction.

**Gist of the written statement :**

The suit property belongs to the defendant. The plaintiff sold away the property on 25/12/2000 and handed over the possession after executing the sale agreement. Since two years time mentioned in the deed for registration and considering the close relationship, deed was not registered immediately though possession given to the defendant. After taking possession, the defendant had cultivated sugarcane crop and it is ripe for cutting. When the defendant approached the plaintiff for registration of the sale deed he refused. The defendant lodged a criminal complaint with the police and the investigation is pending. To defeat the right of the defendant, the suit for permanent injunction is filed with imaginary cause of action as if on 17/04/2011 the defendant and his men and agents trespass into the suit property and attempted to harvest the standing crop. The suit property always been with the possession of the defendant since 25/12/2000 and the crops in the property were raised by the defendant.

The plaintiff relies on the patta, chitta, adangal and kist receipts for the suit property. The defendant relies on the unregistered sale deed dated 25/12/2000 and the copy of the complaint given to the police against the plaintiff.

Frame issues and write judgment.

---

TNPSC - SPECIMEN